1024

தொழில்

OFFICE ... MADRAS ... 1958

INDUSTRY FORTNIGHTLY

மாதம் இருமுறை

15-12-58

ஆசிரியர்: K. பெருமாள் உடையார்

விலை 25 நயாபைசா

உதட்டிலே உறவும், உள்ளத்திலே கள்ளமும் கொள்ளாதிருக்க இன்றே கதரை வாங்குங்கள் !

வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை, கதருக்கு இல்லை கபடச் சிந்தை!

உழைப்பின் மதிப்பு விலையில் இல்லை, ஏழைகளின் உயர்வு பதவியில் இல்லை!

உங்கள் மனதுக்கு ரம்மியமான பட்டுமுதல் பருத்தி ஆடைகள் வரை கிடைக்கும்

உங்கள் அளவுக்குத் தகுதியான தைத்த உடைகள் தயாராக இருக்கின்றன

ரூபாய்க்கு அணு 0—3—6 கமிஷன் கொடுக்கப்படும்.

கதர்

சத்தியத்தின் சின்னம்! சமத்துவத்தின் அறிகுறி!

இன்றே கதரை அணியுங்கள் ; நன்றே செய்யுங்கள் !

நாடெங்கும் வாழ கேடொன்றும் இல்லை

மந்திரிகள் முதல் மக்கள்வரை பேதமின்றி செய்யும் தொழில் இது ஒன்றே.

★

சென்னை கதர் அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

[கதர், குடிசைத் தொழில் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்டது]

86, பிராட்வே, சென்னை-1.

விற்பனை கிளை :

ஜெயா மான்ஷன், பெரியமெட்டு, சென்னை-3.

இந்த இதழில்

பக்கம்

ஒட்டை காரில் உல்லாச பிரயாணம் ... 2

தலையங்கம் :

உடனடி பரிகாரம் தேவை ... 3

கோபி அரசியல் மகாநாடு ... 5

தொழில் வர்த்தக இலாகா சிறு அதிகாரிகள் கைது ... 8

தொடர் நாவல் :

இதுதான் காதல்! ... 9

வான வெளிப் பயணம் (படத்தோடு) கட்டுரை ... 16

வாழ்வின் உண்மை ,, ... 19

சிறு கதைகள் :

பரிசும், பாவையும் ... 22

புதுவை கதை ... 27

ஊதுபத்தி செய்முறைகள் ... 25

சாயத்தொழில் ... 26

காத்தவராயன் (சினிமா விமர்சனம்) ... 31

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
DEC 1958
MADRAS

கதை, கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே.

TEL. { GRAM: SUPERBLEND
PHONE: 86114

மிகசிறந்ததும் உற்சாகமளிப்பதுமான

ஏ.கே.ஏ காபியை அருந்துங்கள்

ஏ.கே.அப்பாதுரை முதலியார் & சன்ஸ்

(காபி & மளிகை வியாபாரம்)

132 136. பைகிராப்ட்ஸ் ரோடு, மதராஸ்-5.

கிளை: 17. தெற்குமாடவீதி, மைலாப்பூர்.

BHARAT STUDIO

Telegrams: Marigold
Phone · 2438.

K Perumal Udayar

Importer, Exporter & Manufacturers' Representative

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்

55, எடப்பாளையம் தெரு,
சென்னை-3.

★ ஓட்டை காரில் உல்லாச பிரயாணம் ★

1930-ம் ஆண்டில் செய்யப்பட்ட பியட்கார், ஆனல் எல்லா பாகங்களும் ஓட்டையும், உடைசலும். இதில் பிரயாணம் செய்துவரும் இத்தாலியர்களான வாலிபர்கள் இருவர் யூகோஸ்லேவியா, கிரீஸ், சிரியா, துருக்கி, இராக், இரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் இவைகளை யெல்லாம் கடந்து இந்தியாவையடைந்துள்ளனர். ஒருவர் பெயர் டெஸ்ஸோர் ஆல்பர்ட்டோ, வயது 27, பத்திரிகையாளர், மற்றொருவர் பெயர் பியோலெட்டி கியூலியானு, வயது 26, புகைப்படக்காரார். இவர்களோடு புதுடில்லியில் அமெரிக்க யுவதியான மிஸ். ஜாய்ஸ் ஷிப்மேனும் சேர்ந்து கொண்டாள். இந்த கோஷ்டியினர் சென்னை வந்து சேர்ந்தனர். இந்தக் கார் ஆப்கானிஸ்தானில் 50 முறை பஞ்சரானதாம்: இத்தாலிய யுவர்கள் இருவரும் பழைய கார் கிளப்பை சேர்ந்தவர்களாம்.

BUY ALWAYS
OUR BEST QUALITY
FINE & DELICIOUS TO DRINK
COFFEE
RAW, ROAST & GROUND
Our Scented Nuts—A Speciality
Sawmy's Coffee Mfg., Co.,
262, Netaji Subhas Chandra Bose Road, Madras-1.
Phone No. 3687.

ஆலய அதிசயம்

திருமுருகன்பூண்டி

திருப்பூர் ரயில் நிலயத்திலிருந்து அவினசிபோகும் சாலையில் 5-வது மைலிலுள்ள திருமுருகன்பூண்டி என்ற ஸ்தலத்தில் முருகநாத ஈஸ்வரர் ஆலயம் ஒன்றிருக்கிறது. அந்தத் திருமுருகன் சந்நிதியில் பிரமஹத்திதோஷம், பைத்தியம் போன்ற நோய்கள் தீர்த்தஸ்நானத்தால் நிவர்த்தியாவதாய் கூறப்படுகிறது. இந்த ஸ்தலம் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்று சிறப்படைந்தது. இந்தஸ்தலம் மராமத்து செய்யப்படாத காரணத்தால் சிலமடைந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகிகள் கவனித்து உடனடியாய் சீர்திருத்தினல் வழிப்படுவோர்க்கு உதவியாய் இருக்கும்.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே !"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1 | சென்னை, 15—12—58 | இதழ் 16

உடனடி பரிகாரம் தேவை

இரும்பு எஃகு கண்ட்ரோல் ஏற்பட்டு சுமார் 12 வருடங்கள் ஆகின்றது. அவரவர் தேவையை நிர்ணயம் பண்ணி, தொழில் தடைப்படாமல் நடைபெறுவதற்கானவகையில் அளவுப் பிரகாரம் இரும்பு எஃகு விநியோகத்தைக் கையாண்டு வந்தனர் அரசாங்கத்தினர். இதை, தற்போது டைரக்டராயுள்ள ஸ்ரீ T. K. பழனியப்பனும், கூட்டு டைரக்டர் T. R. கிருஷ்ணசாமியும், 1—10—58 விருந்து ரத்துசெய்து புதுமுறையைப் (New Policy) புகுத்தியுள்ளனர்.

இந்தப் புதுமுறையின்படி சர்க்கார் அங்கீகாரம் பெற்றபேப்ரிகேட்டர்களுக்கு எழுத்தளவில் 'கோட்டா' நிர்ணயம் செய்யப்பட்டுத்தான் இருக்கிறது. நிர்ணயித்தபடி இரும்பு எஃகு கொடுக்கப்படுகிறதாயும் இல்லை. நிர்ணயித்த அளவில் மூன்றில் ஒரு பங்கே கொடுக்கப்படுகிறது. இது தான் நமக்கு விந்தையை அளிக்கிறது.

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா, கர்னடகம் இந்த நான்குப் பிரிவு பிரதேசங்களும் ஒன்றாய் இணைந்திருந்த சென்னை மாகாணத்தில் சுமார் 260 அங்கீகாரம் பெற்ற இரும்பு எஃகு உற்பத்தியாளர்கள் (Approved Fabricators) இருந்தார்கள். 1953 அக்டோபர் 1-தேதி ஆந்திரா பிரிந்தது. பிறகு கேரளா. இவ்வாறு பிரிவினைகள் ஏற்பட்டும் சென்னைராஜ்யத்தில் சுமார் 130 பேப்ரிகேட்டர்கள் வரை இருந்தார்கள். மூன்று ஆண்டுகளுக்குப் பின் குடிசைத் தொழில் அபிவிர்த்தித் திட்டம் (Cottage Industries Development Schemes) என்ற அடிப்படையில் இரும்பு எஃகு தேவையை அதிகப்படுத்தி, அதன் காரணமாய் சுமார் 250 நபர்கள் வரை புதிதாய் சேர்க்கப்பட்டார்கள். சிறுதொழில் வளர வேண்டியது மிகமிக அவசியம். அதற்கு உதவுவது வரவேற்கதக்கதே!

அதிகரித்துப்போன தேவையை மத்திய சர்க்காரின் அதிகப்படி விநியோகத்தால்தான் சமாளிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஆனல், ராஜ்ய சர்க்கார் எதிர்பார்க்கும் அளவுக்கு மத்திய சர்க்கார் கொடுத்தால்தானே?

கொடுத்துவந்த அளவாவது நீடித்ததா? இல்லை; கொடுத்த அளவிலும் குறைத்துவிட்டது மத்திய சர்க்கார். கோட்டாகாரர்களின் எண்ணிக்கையோ அதிகம். விநியோக அளவோ குறைவு, எப்படி சமாளிக்க முடியும்?

மத்திய சர்க்கார் அதிகமாய்த்[illegible]தால் ராஜ்ய சர்க்கார் குறைத்துத் தரு

ஸ்ரீமதி இந்திரா காந்தி

சுதந்திரப் போராட்டத்தில் தீவிரபங்கேற்ற "நேரு" குடும்பத்தின் தூண்டா மணிவிளக்காய்த் திகழும் ஸ்ரீமதி இந்திராகாந்தி, அண்மையில் கோபிச் செட்டிப் பாளையத்தில் நடந்த பெண்கள் மகாநாட்டைத் திறந்து வைத்து மாதர் இன முன்னேற்றத்திற்கான அரிய கருத்துக்களை வழங்கியுள்ளார். அன்னரின் உருவம் அணி செய்கிறது இவ்விதழை.

கிறது என்றாகிவிட்டிருக்கிறது. இந்த மாறுதலால், இரும்பு எஃகுவை மூலப் பொருள்களாய்க்கொண்டு தொழில் நடத்தி வந்த ஏராளமான பேப்ரிகேட்டர்கள் சரியான வருவாய் இழந்து தொல்லைப்படுகிறார்கள்.

தற்காலிகமாய், விவசாயக் கருவிகள் செய்வதற்கு, ஒதுக்கியிருக்கும் 'அலாட்மென்டில்' 50 சத விகிதம் மாற்றியாவது அப்ரூவ்ட் பேப்ரிகேட்டர்களுக்குக் கொடுத்து உதவிசெய்வதுதக்க பரிகாரமாகும். இதற்கு முன்பும் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிற தென்பதை நினைவுறுத்துகிறோம்.

இந்த அவதியைப்போக்க ராஜ்ய சர்க்கார் உடனடியாய் பரிகாரம் தேடுவதில் ஈடுபடவேண்டியது அவசியமாகும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், பேப்ரிகேட்டர்களும் தூது கோஷ்டியமைத்து மத்திய சர்க்கார் அதிகாரிகளைச் சந்தித்து நிலைமையை விளக்கி உடனடியான பரிகாரம் கிடைக்கச்செய்வதே சரியான மார்க்க மாகும். இவ்வாறு செய்தால்தான் தொழிலை நம்பிவாழும் பலரின் அவல நிலையை சரிப்படுத்த இயலும்.

———

144860

பாராட்டுகிறோம்

கோபியில் கூடிய சென்னை மாகாண 45—வது அரசியல் மகாநாடு, நாம் சென்ற இதழ் தலையங்கத்தில் குறித்தவாறுவெற்றிகரமாய் நடந்தேறியது பற்றி மகிழ்வெய்துகிறோம். நாட்டின் நெருக்கடியை சமாளிப்பதற்கு ஆக்க வேலைக்கான தீர்மானங்களை நிறைவேற்றிய அரசியல் தலைவர்களின் சாதனையை நாம் மனமுவந்து பாராட்டுகிறோம். மகாநாட்டை வெற்றிகரமாய் நடத்தியும், விஜயம் செய்த லட்சகணக்கான மக்களை குறையேதும் ஏற்படாதவாறு வரவேற்று உபசரித்தும் கண்ணியப்படுத்திய வரவேற்பு குழுவினர்க்கும், நகர காங்கிரஸ் கமிட்டியார்க்கும், ஜில்லா கமிட்டியார்க்கும் மண்டல காங்கிரஸ் குழுவினர்க்கும், மகாநாட்டில் பங்கேற்று நடத்திய ஸ்ரீதேபர், காமராஜ், பக்தவத்சலம், ராஜாராம், சுப்ரமண்யம் ஆகியோர்க்கும், பெண்கள் மகாநாட்டில் பங்கேற்று நடத்திய ஸ்ரீமதி இந்திராகாந்தி, சாவித்திரி ஷண்முகம், அம்புஜம்மாள் ஆகியோர்க்கும் நம் பாராட்டு உரித்தாகுக.

மேலும் கண்காட்சி சாலை நிறுவி வந்திருந்தோர் அனைவரின் பாராட்டுதலையும் பெற்ற அதன் நிர்வாகிகளையும் நாம் பாராட்டுகிறோம்.

இம்மகாநாட்டில் விவசாயிகளின் பிரச்னைக்கான உருவான திட்டம் வகுத்து நிறைவேற்றியுள்ளது பாராட்டுதலுக்குரியதாகும் என்பது மிகையல்ல.

ஆசிரியர்

நமது அறிவிப்பு

நமது "தொழில்" பத்திரிகை வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட அபிமானிகளும், விற்பனையாளர்களும் பன்முறை கேட்டுக் கொண்டதற்கிணங்க அடுத்துவரும் 17-ம் இதழ்—1—1—59 லிருந்து புத்தக வடிவில் வெளிவருகிற தென்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறோம். இனி தொழில் அழகிய முகப்போடும், கண்ணிற்கும், கருத்திற்கும் கவர்ச்சியை யளிக்கும் அழகிய சித்திரங்களோடும், தொழில் முறைகள், கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விஞ்ஞான விளக்கங்கள், சினிமா செய்திகள் ஆகிய முக்கிய அம்சங்களோடும்எல்லோர் உள்ளத்திலும் இன்பத்தைப் பெருக்கும் விதத்தில் வெளிவருவதால், வாசக நேயர்களும், விற்பனையாளர்களும் ஆதரவு நல்கி "தொழில்" மேலும் வளர்ச்சியுற உதவிபுரிவார்களென் றெதிர் பார்க்கிறோம்.

—நிர்வாகி.

கோபி அரசியல் மகாநாடு

ஸ்ரீ K. ராஜாராம் அவர்கள் கருத்துரை

அண்ணலுக்கு அஞ்சலி

பல்வேறு இனத்தவர்களாய் ஒருவருக்கொருவர் சம்பந்தமின்றி சிதறிக் கிடந்த நம்மை ஒன்று சேர்த்த பெருமை அண்ணல் காந்தியடிகளுக்கே உரியது.

விவசாய நிலை

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விவசாயிகளின் கடன் வசதிக்காக கூட்டுறவு ஸ்தாபனங்களை அமைக்கவேண்டுமென்றும், நில உடமைக்கு வரம்புகட்டு முன்பு இவ்வேற்பாட்டைச் செய்து முடித்துவிடவேண்டும் என்று கூறும் நமது சர்க்காரின் யோசனை வரவேற்கத்தக்கது.

நதி நீர்

அரபிக்கடலில் வீணாக பாய்ந்து கொண்டிருக்கும் எஞ்சிய பெரியாறு, பம்பையாறு, கல்லாறு ஆகியவைகளின் நீரை மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்குப் பாயும் படிச் செய்யவேண்டியது நமது ராஜ்ய சர்க்காரின் அடுத்த முக்கிய கடமையாகும்.

தமிழ்நாட்டில் புது தொழிற்சாலைகள்

சேலத்தில் கிடைக்கும் தாதுப்பொருள்களைக் கொண்டு அலுமினிய தொழிற்சாலை ஏற்படுத்த மத்திய அரசாங்கமும் நமது மாகாண அரசாங்கமும் துரிதமாக நடவடிக்கை எடுத்துவருவது பாராட்டத்தக்கது. இரும்பு தொழிற்சாலை ஆரம்பிக்கும் முயற்சியில் சீக்கிரம் ஈடுபடுவார்கள் என்றெதிர் பார்க்கிறேன்.

தொழிற் சங்கங்கள்

தொழிற்சங்கங்கள் தொழிலாளரின் நன்மையையும், அத்தொழிலின் வளர்ச்சியையும், தேச முன்னேற்றத்தையும் மனதில்கொண்டு இயங்கவேண்டும்.

கதர்

இன்று தமிழ்நாட்டில் 1,25,000 குடும்பங்கள் நூல் நூற்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 அணா முதல் ரூ 1-4-0 வரை கூலி கிடைக்கிறது. (மொத்தக் கதர் தரிகள் 3000)

கைத்தறி

சுமார் 5½ லட்சம் மக்கள் கைத்தறியை நம்பிவாழ்க்கை நடத்துகிறார்கள். அத்தொழிலுக்கு சமீபகாலத்தில் மாகாண சர்க்காரும், மத்திய சர்க்காரும் ஆதரவு தருவது அத்தொழில் அபிவிர்த்திக்கு சிறப்பான முறையில் உதவியிருக்கிறது.

கல்வி

1946-ல் பழைய சென்னை ராஜ்யத்தில் ஆரம்பபாடசாலைகளுக்கு சென்றுகொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 30 லட்சம். ஆனால் 1958-ல் தமிழ் நாட்டில் மட்டும் 26 லட்சத்து 40 ஆயிரம் குழந்தைகள் ஆரம்பப் பள்ளிகளில் படித்து வருகிறார்கள்.

பழைய சென்னை ராஜ்யத்தில் மொத்தம் 3,87,534 மாணவர்கள் உயர்நிலை பள்ளிகளில் இருந்தனர். மாகாணப் பிரிவினைக்குப்பின் 1958-ம் வருஷத்தில் 5,19,374 மாணவர்கள் படித்து வருகிறார்கள்.

மாணவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் ஜாதியை அடிப்படையாய்க் கொள்ளாமல் பொருளாதாரத்தை அடிப்படையாய்க் கொண்டதாய் இருக்க வேண்டுமென்று கன்னியாகுமரியில் நிறைவேறிய த. நா. கா. கமிட்டியின் தீர்மானம் தாமதமின்றி நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமென நம்புகிறேன்.

ஆட்சிமொழி

தமிழ் நாட்டிலும், தமிழ் தான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென முடிவு செய்யப்பட்டு அதை அமுல் நடத்தும் முயற்சியில் நமது அரசினர் ஈடுபட்டுள்ளனர்.

நமது ராஜ்யத்தில் பிற மொழிகள் பேசுகின்றவர்கள் இருந்தாலும் அவர்கள் தமிழையே ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டிருப்பது கண்கூடு. மத்திய அரசாங்க நிர்வாகத்திற்கும் இதைப் போலவே இந்தியாவில் பெரும்பாலோர் வழங்கி வரும் பாஷையாகிய ஹிந்தி

மொழியே ஆட்சி மொழியாக ஆகத் த்குதி யுடையது. ஆகவே, ஹிந்தியை மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக்கக் கூடாது என்று சொல்வது, சென்னை ராஜ்யத்தில் தமிழை ஆட்சி மொழியாக்கக் கூடாது என்பற் கொப்பாகும்.

ஹரிஜன முன்னேற்றம்

ஹரிஜனங்கள் முன்னேற்றத்துக்காக மகாத்மாவும் காங்கிரஸூம் செய்த சேவைகளைக் குறிப்பிட்டு, 1947-48-லிருந்து எல்லாக் கல்லூரிகளிலும் 100-க்கு 10 ஸ்தானங்கள் ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கல்வி கற்பதற்கான செலவனைத்தும், உணவு, ஜாகை முதலிய வசதிகளும் சர்க்காரே ஏற்றுக் கொள்ளுகின்றனர். ஹரிஜனங்களின் முன்னேற்ற வேலைகளுக்காக 1947-48-ல் 38 லக்ஷம் செலவழிக்கப்பட்டுள்ளது. ஆனால் 1958-59ல் இதற்காக 2 கோடி, 33 லக்ஷம் ஒதுக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள்

சென்னை துறைமுக விஸ்தரிப்பு வேலை தீவிரமாக நடைபெறுகிறது. சேது சமுத்திரத் திட்டத்தை 3-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேனும் நிறைவேற்றுவதற்கான முயற்சியை அரசினர் மேற்கொள்ளுவ இ[illegible]நம்புகிறேன். தூத்துக்குடி துறைமுகத்தை ஆழப்படுத்தி புதிய துறைகள் கட்டுவதும், சீமக்கரை, தொண்டி, வேதாரண்யம், நாகப்பட்டினம், கடலூர் முதலிய சிறு துறைமுகங்களை ஆழப்படுத்தி நவீன வசதிகளையும் செய்து கொடுப்பதன் மூலம் நமது ராஜ்யத்தில் கடல் மூலம் வாணிபத்தைப் பெருக்கும் முயற்சியைச் செய்யுமாறு அரசினரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இலங்கை-இந்தியா உறவு

நமது அண்டை நாடான இலங்கைக்கும் நமக்கும் என்றுமே சௌஜன்யமான உறவுதான் இருந்து வந்துள்ளது. இன்றும் அவ்வுறவை நீடித்துப் பலப்படுத்தி வரவேண்டுமென்பதே நமது நோக்கம்.

இது விஷயமாக இந்திய சர்க்காருக்கும் இலங்கை சர்க்காருக்கும் நடந்துவரும் பேச்சுவார்த்தை சுமுகமாகவும், துரிதமாகவும் முடிவு பெற வேண்டுமென விழைகிறோம்.

சிங்கப்பூரிலும், மலேயாவிலும் சீனருக்குள்ள எல்லா உரிமைகளும் இந்தியருக்கும் கிடைக்க, மத்திய அரசாங்கம் வழி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஆக்க ரீதியான செயல்களைப் புரிந்து மக்களின் நம்பிக்கையைப் பெற அரசியல் கட்சிகள் வரவேண்டுமென்பதுதான் நம் அவா!

இதற்காகவே எழுத்துச் சதந்திரமும் பேச்சுச் சுதந்தரமும் பூரணமாக அனுமதிக்கப் பட்டுள்ளது. ஆனால் இன்று நாம் காண்பதென்ன? ஒருபக்கம் ஹிந்து மகா சபை, முஸ்லிம் லீக்; ஜனசங் போன்ற கட்சிகள் மதத்தின் பேரால் நாட்டு மக்களிடையே துவேஷத்தைப் பரப்பி வருகிறார்கள். மற்றொரு பக்கம் பாஷைகளின் பேராலும், பிரதேசங்களின் பேராலும் கட்சிகளையமைத்து வடநாடு, தென்னாடு என்ற பிரிவினை மனப்பான்மையையும் தமிழர்-தமிழர் அல்லாதவர் என்ற துவேஷ மனப்பான்மையையும் வளர்த்து, நாட்டைத் துண்டாடவும் முற்படுகின்றனர். மற்றொரு புறம் பொதுவுடைமைக் கட்சியினர் தற்காலத்துக்கு ஒவ்வாத உளுத்துப்போன பத்தாம் பசலிக் கொள்கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டும், சமயமேற்பட்டால் பலாத்காரத்திலீடுபடுபவர்களாகவும் இருக்கிறார்கள்.

Phone : 2438 Grams : MARIGOLD

விளம்பர விகிதம்

ராப்பர் 4-வது பக்கம் (மூன்று கலர்)	150—0—0
,, ,, (இரண்டு கலர்)	85—0—0
ராப்பர்உள் பக்கம் ஒரு கலர்	50—0—0
சாதாரண முழு பக்கம்	40—0—0
,, ½ பக்கம்	25—0—0
,, ¼ பக்கம்	15—0—0

காண்டிராக்ட் விளம்பரங்களுக்கு,
அட்வர்டைஸ்மென்ட் மானேஜர்,
"தொழில்"
55, எடப்பாளையம் தெரு, சென்னை-5.

கோவை—சேலம் ஜில்லா பேப்ரிகேட்டர்கள் சங்கம்

கோவை-சேலம் ஜில்லா அயர்ன் &ஸ்டீல் பேப்ரி கேட்டர்களின் சங்கத்தின் ஆரம்பவிழாவும், முதல் ஜெனரல்பாடிக் கூட்டமும், சென்னை ராஜ்ய அயர்ன் & ஸ்டீல் பேப்ரி கேட்டர்கள் சங்கத்தின் தலைவரும் "தொழில்" பத்திரிகை ஆசிரியருமாகிய ஸ்ரீ. K. பெருமாள் உடையார் அவர்கள் தலைமையில் 8—12—58 உ காலை 10 மணிக்கு கோயம்புத்தூர் கீதா ஹாலில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இரும்பு எஃகு உற்பத்தி சாமான்கள் செய்வோருக்கு அதிலும் குறிப்பாக தொழில் வளம் நிறைந்த கோவை, சேலம் ஆகிய இரு ஜில்லாக்களிலும் உள்ளவர்களுக்கு சங்கம் இருக்க வேண்டிய அவசியத்தையும், அதனால் கிடைக்கும் அநுகூலம், ஒற்றுமை முதலியவை பற்றியும் தலைவர் அவர்கள் விரிவாகப் பேசினார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது.

பேப்ரி கேட்டர்களின் கஷ்டங்களை இரும்பு எஃகு கண்ட்ரோல் டைரக்டர் நன்கு அறிவார். அவர் நம் குறைகளை சீக்கிரமே தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. எனவே, பேப்ரிகேட்டர்களான நாம் ஒற்றுமையுடனிருந்து நமது சங்கத்தின் மூலம் வளர்ச்சியடைவோம் என்று பேசி முடித்தார்.

கீழ் கண்டவர்கள் 1958-59 வருஷத்து சங்கத்தின் நிர்வாகிகளாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு, சங்க காரியதரிசி ஸ்ரீ D. குழந்தைசாமி அவர்கள் வந்தனோபசாரம் கூறிய பின் கூட்டம் இனிது முடிவு பெற்றது.

தலைவர் ஸ்ரீ T. M. சுப்ரமணிய ஆச்சாரி திருச்செங்கோடு. உபதலைவர் K. R. பரமேஸ்வரய்யர் — கோவை பொது காரியதரிசி. D. குழந்தைசாமி — கோவை, உபகாரியதரிசி. P. சுந்தரராஜ்—பொள்ளாச்சி பொக்கிஷதார் I. S. பட்டேல்—கோவை.

மேலும் 10 அங்கத்தினர்கள் நிர்வாக கமிட்டி அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று பொதுக் காரியதரிசி ஸ்ரீ குழந்தைசாமி அறிவிக்கிறார்.

சங்க நிகழ்ச்சிகள்

பீளமேடு

குலாலர் சங்கத்தில்

ஸ்ரீ K. பெருமாள் உடையார்

கடந்த 8—12—58ல் பீளமேடு திருவள்ளுவர் வாசகசாலை, குலாலர் வாலிபர் சங்கம் இவற்றின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சென்னை நகரசபை ஆல்டர்மெனும், "தொழில்" ஆசிரியருமான ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தலைமைவகித்தார். தலைவர் தம் உரையில் குலாலர் ஐக்கியமாய் இருந்து அரசாங்கத்தார் அளிக்கும் உதவிகளைப் பெற்று முன்னேற வேண்டுமென்று குறிப்பிட்டார்.

தொண்டாமுத்தூர் ஸ்ரீ T. N. ரங்கசாமி அவர்களும் பொள்ளாச்சி ஸ்ரீ P. A. நாச்சிமுத்து அவர்களும் குலாலர் முன்னேற்றங் குறித்துப் பேசினர். விருந்துபசாரத்திற்குப்பின் காரியதரிசியின் வந்தனோபசாரத்தோடு கூட்டம் இனிது முடிந்தது.

கோவை

கோவை சுக்ரவாரப்பேட்டை மண்பாண்ட உற்பத்தி கூட்டுறவு சங்கத்தில் நடந்த கூட்டத்திற்கு ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்கள் தலைமை தாங்கினர்.

பின்னர் ஸ்ரீ T. N. ரங்கசாமி அவர்களும், ஸ்ரீ P. A. நாச்சிமுத்து அவர்களும் பேசியபின் காரியதரிசி ஸ்ரீ மருதாசலம் அவர்களின் வந்தனோபசாரத்தோடு கூட்டம் முடிவுற்றது.

எழுத்தாளர்களுக்கு :

தொழிலில் பிரசுரிக்க அனுப்பிவைக்கப்படும் கட்டுரைகள், சிறுகதைகள் ஒன்று முதல் மூன்று பக்கங்களுக்கு அதிகம்போகாதவாறிருத்தல் வேண்டும். கவிதைகள் அரைபக்க முதல் ஒரு பக்கத்திற்கு மேல் போகாதவாறு எழுதியனுப்புதல் வேண்டும். பிரசுரமாகாததைத் திரும்பப்பெற, போதுமான தபால் பில்லை யனுப்பிவைத்தல் வேண்டும்.

PHONE : 4305 GRAMS : "GOODHEART"

MURLIMAL SANTRAM & CO.,

(MADRAS) PRIVATE LTD.,

GOVERNMENT CONTROLLED STOCKISTS OF STEEL & PIPES

13, Sembudoss Street, MADRAS-1.

Pipes available from Ready Stock,

GALVANISED, BLACK AND STEAM QUALITY PIPES ½" TO 6" FROM TATA / S & L AND BEST IMPORTED, AND ALSO PIPE FITTINGS IN ALL SIZES,

CONTACT FOR REQUIREMENTS.

தொடர் நாவல் :

முன் கதை......

* * * * *

லலிதா : பி. ஏ.

கணேசன் : பி. ஏ.

சாந்தா : பி. ஏ., (கணேசன் தங்கை)

சர்க்கார் காரியாலயத்தில் பணிபுரிந்து உபகார சம்பளம் பெற்று ஓய்வெடுத்து வந்த சுந்தரம் சரஸ்வதி மில் மானேஜராய் நியமனம் பெறுகிறார். மகள் லலிதா, பி. ஏ. படித்து தேர்ந்தவள். அவள் கல்யாண சம்பந்தமாய் சுந்தரத்துக்கும், அவர் மனைவி சுசீலாவுக்கும் தகராறு முற்றுகிறது. தன் மகளை குடியனான தம்பி சிவகுமாருக்குத் தரவேண்டுமென்பது சுசீலாவின் ஆவல். அதையறிந்த தந்தையும், மகளும் வெகுளுகின்றனர். இந்தக் குழப்பத்திற்கிடையே லலிதாவின் பள்ளித்தோழியான சாந்தா, அன்றிரவு நடக்கப் போகும் மஞ்சரி கோஷ்டியாரின் நடனத்தைப் பார்க்க அழைத்து டிக்கெட்டையும் கொடுத்துவிட்டுப் போகிறாள். * * * * *

அடுத்து நடப்பனவற்றை தொடர்ந்து படியுங்கள்.

"சாந்தா! என் நன்றிகலந்த வணக்கத்தை உனக்கு சமர்ப்பிக்கின்றேன். பெரிய இடத்துப் பெண்ணான உன் ஆடம்பர வாழ்விலே என் நினைவு எங்கே ஏற்படப் போகிறது என்று நினைத்திருந்தேன். ஆனால் நீ நட்பின் பெருமையை நிலை நாட்டி விட்டாய்" என்றாள் லலிதா.

லலிதா! நீ எப்போதும் குறும்புகாரி! பணம் படைத்து விட்டால் பாசத்தைகூட மறந்து விடுவேன் என்று நினைக்கிறாயா? பணமில்லாதவர்களை அவ்வளவு இழிவாக நினைப்பவள் இந்த சாந்தா இல்லை?" என்றாள்.

இருவரும் பேசிக்கொண்டே மாடியை விட்டு கீழே இறங்கினார்கள்.

"சரி லலிதா நேரமாகி விட்டது. வீட்டில் அம்மா எதிர் பார்த்துக்கொண்டு இருப்பார்கள். மாலை 6 மணிக்கு நான் வந்து விடுகிறேன். தயாராய் இரு" என்று சொல்லி வெளியில் புறப்பட்டாள் சாந்தா.

மாலை மணி ஆறு ஆகியது. கதிரவன் செங்குழம்பை வாரி இறைத்த வண்ணம் மேலை மலை முகட்டைக்கடந்து கொண்டிருந்தான். குளிர்ந்த காற்றும் லேசாக வீசிக்கொண்டிருந்தது. லலிதா நடனம் பார்க்கப் போகும் மனக் களிப்பில் நவீனப் போக்கில் நல்லுடை தரித்து சாந்தாவின் வருகையை எதிர்பார்த்தாள். சாந்தாவும் உடனே புறப்பட்டு லலிதா வீடு வந்து சேர்ந்தாள். இருவரும் தெரு வாசலுக்கு வந்த சமயம் வாட

கைக் கார் ஒன்று அவ்வழியாய்ச் செல்லவே அதை நிறுத்தி ஏறினர் இளங்குமரிகள் இருவரும். வாடகைக் கார் காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தது.

—5— மஞ்சரியின் நடனமும், லலிதாவின் மாறுதலும்

ரஞ்சித் மஹாலின் முன் ஒரே ஜனத்திரள். கூச்சல், குழப்பம். ஜனக்கூட்டம் கட்டுக்கடங்கவில்லை. இத்தனைக்கும் ஒலி பெருக்கியின் அலறல் சப்தம் ஓங்கி யிருந்தது. ஒவ்வொரு வகுப்பும் நிறைந்து இடம் கிடைக்காமல் காலரி முதல் பெஞ்சுவரை பெரும்பாலோர் நிற்க வேண்டியதாயிற்று. அவ்வளவு ரஸிக பெருமக்கள் வந்திருந்தனர் நடன விழாவுக்கு.

நடன அரங்கிற்கு முன் வரிசையிலே காண்ட்ராக்டரின் குடும்பத்தினருக்காகவும், உயர்ந்த அதிகாரிகளுக்காகவும் பல சீட்டுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. சாந்தாவின் குடும்பத்தினர் அச்சீட்டுகளில் அமர்ந்திருந்தனர். கூட்டத்தினரை சமாளித்துக் கொண்டு சாந்தாவும் லலிதாவும் உள்ளே சென்றார்கள். சாந்தாவின் தகப்பனார் இருவரையும் அழைத்துச் சென்று தன் குடும்பத்தவரிருக்குமிடத்தில் விட்டுச் சென்றார்.

நடனம் ஆரம்பமாவதற்கு இன்னும் பதினைந்து நிமிஷங்கள் இருந்தது. அப்போதுதான் அங்கே வந்து சேர்ந்த சில பெரிய . மனிதர்களை, அவர்களுக்கென ரிஸர்வ் செய்யப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்த்திச் செல்ல வந்திருந்தான் சாந்தாவின் அண்ணன் கணேசன். அப்போது சாந்தாவும், லலிதாவும் தனியாய் அமர்ந்து ஏதோ பேச்சு சுவாரசியத்தில் மூழ்கி யிருந்தனர். ஜனத்திரளைக் கண்டு கணேசன் அப்படியும் இப்படியுமாக வருவதும்போவதுமாய் இருந்தான். அண்ணனை நிமிர்ந்து பார்த்தாள் சாந்தா. "அண்ணா!" என்று குரல் கொடுத்தாள். கணேசன் பார்வையை அங்கு செலுத்தினான்: மின்னொளி தாக்கியது போன்ற உணர்ச்சி யடைந்தான் கணேசன். சாந்தாவின் பக்கத்தில் அமர்ந்திருக்கும் லலிதா யார் என்றே புரியாமல் திகைத்து நின்று விட்டான். அவன் கண்கள் நிலை குத்தி நின்று விட்டன.

"சாந்தா! நீ அம்மாவுடன் தான் இருக்கிறாய் என்று நினைத்தேன்! தனியாய் வந்து வம்பளந்து கொண்டிருக்கிறாயா?" என்றான் அவன்.

தங்கையிடம் கணேசன் பேசும் துடிப்பை லலிதா கவனிக்காமலில்லை. கடைக் கண்கள் அவனை ஊடுருவிக்கொண்டிருந்தன.

லலிதா, சாந்தாவோடு நான்கு ஆண்டுகளுக்கு அதிகமாக பழகி வருகிறாள். கல்லூரியில் ஏற்பட்ட நட்பு; ஊர் திரும்பியும் நீடித்தது. அடிக்கடி சாந்தாவை காண அவள் வீடு தேடி போவாள் லலிதா. அப்போதெல்லாம் கணேசனை அவள் சந்தித்தவள் அல்ல. சந்திக்கக் கூடிய சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. சாந்தா தன் அண்ணனைப் பற்றி பல முறை பிரஸ்தாபித்திருக்கிறாள். எனினும் அப்போதெல்லாம் அவனை கவனித்தவள் அல்ல. இப்போதோ......?

அன்று கணேசன் மிடுக்குடன் காணப்பட்டான். அவன் வார்த்தையில் வாத்ஸல்யம தாண்டவமாடியது. முதன் முதல் சாந்தாவுடன் பேசியபோதுதான் புது உணர்ச்சி வசப்பட்டாள் அவள். இன்பமாய் ஒலித்தது அவன் பேச்சு. அவன் பார்வை வெட்கத்தை கிளறிவிட்டது. நாணத்தோடு பார்த்தாள். எதற்காக இப்படி பார்க்கிறாள் என்று அவன் உள்ளம் கேள்வியை எழுப்பியது! அந்த எண்ணத்தின் கேள்விக்கு பதில் சொல்ல தெரியாமல் அவள் பார்வையில் இருந்து விடுபட எத்தனித்தான் கணேசன்!

மணி ஆறு அடித்தது. ஹாலில் ஒரே இரைச்சல். விசிலின் சப்தம் வேறே காதைத் துளைத்தது. லைட்டுகள் அணைக்கப்பட்டன. வாத்தியக் கோஷ்டியினர் திடீரென்று நாத முழக்கத்தை யெழுப்பினர். திரை விலகியது. நீல நிற விளக்கின் ஒளி சிறிதாக மேடை உச்சியின்மேல் பிரகாசித்தது. இந்தக் குழப்பத்தில் கணேசன் திகைத்து போய்விட்டான்; எந்த இடத்தில் போய் உட்காருவது என்று புரியவில்லை. ஆனால் லலிதாவின் பக்கத்தில் ஓர் நாற்காலி காலியாக இருந்தது. "அண்ணா! இங்கே உட்கார்ந்து விடுங்கள்!' என்று லலிதா பக்கம் உள்ள நாற்காலியை சுட்டிக்காட்டினாள். கணேசன் திகைத்தான். "பாதகமில்லை; உட்கார்ந்துக்கொள்ளுங்கள்" என்றாள் லலிதா. அவள் பேச்சில் இனிமை சொட்டியது. சங்கோசப் படுபவன் போல் தயக்கத்தோடு லலிதாவின் அருகில் உட்கார்ந்தான் கணேசன்.

காட்சி ஆரம்பமானது. ஆஹா! என்னே அற்புத நிகழ்ச்சி! கற்பனை ஊற்று பிரவகித்தது மேடையில். பார்வைக்கு மறக்க முடியா சம்பவங்கள்! விண் மீன்கள்

CITY LIGHT BRAND STEEL TRUNK WORKS

Manufacturers of Steel Trunks
Consumer Goods

339, Esplanade, Madras-1

ஸ்டீல் ட்ரங், சூட்கேஸ், கேபின் ரகங்கள், பிலிம்பாக்ஸ்கள், பிலிம் ரேக்குகள், வாளிகள், விவசாயக் கருவிகள், பக்கட்டுகள், பில்டிங் சாமான்கள் குறித்த காலத்தில் ஆர்டர் பேரில் தயாரித்து கொடுக்கப்படும்.

Sole Proprietors:

K. Kannabiran Mudaliar,
K. Radhakrishna Mudaliar.

மினுக்மினுக்கென்று பளிச்சிட்டன. மேகக் கூட்டங்களின் பவனி! அதிலே லேசான சிறு காற்று! வாய்விட்டே வர்ணிக்க முடியாத கலைப் படைப்பு.

சிவ கணங்கள் சங்கநாதம் முழங்குகின்றனர். "ஓம் சிவாய நம!.........ஓம் சிவாய நம!!" என்று வானில் இருந்து தம் சேடிமார்களுடன் சிவநேசன் மீது மலர்களை வர்ஷித்துக் கொண்டே தேவ கன்னிகை வருகிறாள். அந்த நேரம் தொட்டிலில் கண்ணுறங்கும் சிசுவைப் போல் காட்சி யளித்தது ரஞ்சித் மஹால். ஓர் நாடக மேடையில்—அதிலும் முப்பதடி நீளமுள்ள விடத்தில், குறுகிய உயரத்தில் இவ்வளவு நிகழ்ச்சிகளா? வான மண்டலம், நட்சத்திரக் கூட்டம், மேக சஞ்சாரம், அங்கிருந்து கீழிறங்கும் அப்சரஸ் ஒருத்தி.

அன்னத்தை தோற்கடிக்கும் அவளது மெல்லிய நடை! கண்ணாடி யொத்த உடை! நளினமான உடலமைப்பு: நீரில் வாழும் மச்சத்தைப் போல், தலை நீட்டி உடலசைத்து பதம் பாடி அபிநயம் பிடித்தாள் அவள். கால்களில் பூட்டியுள்ள சதங்கை "கணீர்! கணீர்" என்று ஒலியெழுப்பின. ரஸிகர்களின் செவிகளில் ரீங்காரமிட்டன சதங்கை யொலி. தேவ அணங்காய் தோற்றமளித்த மஞ்சரி ரஸிகர்களின் மனத்தை யெல்லாம் கொள்ளை கொண்டு விட்டாள் என்றே சொல்லவேண்டும். என்னே அவளது நடிப்பு! என்னே பதங்களின் பாகங்கள்! தாளத்தின் அமைப்பும், வாத்தியங்களின் ஒன்றித்த கோஷமும் கேட்க கிட்டுவனவா யென்று வாய்விட்டு புகழ்ந்தனர் ரசிகர்கள்.

லலிதா மாத்திரம் அன்றைய நடனத்தை ரஸிக்கவில்லை. ஏன்? நாட்டியத்தை ரஸிக்க வேண்டிய அவள் கண்கள் கணேசனைக் கண்டு ரஸித்தது. நடனத்தின் காட்சியை படம் பிடிக்க வேண்டிய அவள் உள்ளம், கணேசனின் தோற்றத்தை படம் பிடித்தது. சாந்தாவுடன் ஆனந்தமாக பேசி லயிக்க வேண்டிய அவள், கணேசனிடம் பேச வேண்டுமென்று துடித்தாள்! சில வினாடியிலேயே லலிதா தன் நிலையை மறந்து விட்டாள். மாற்ற முடியாத உள்ளத்தில் மகுடம் சூட்டி அவனை வரவேற்கிறாள். எந்த மகுடிக்கும் ஆடி நெளியாதவள் லலிதா, கணேசன் முன்னே படம் எடுத்து ஆட ஆரம்பித்து விட்டாள். 'தன் சிநேகிதியின் அண்ணன் என்றால் காதலிக்கக் கூடா

தென்ற விதியா?' இந்தக் கேள்வி அவள் உள்ளத்தில் எழுந்து மறைந்தது.

அவள் வதனத்தில் இன்பவெள்ளம் பெருக்கெடுத்தோடியது. பூரிக்கும் தாரகைகளாக அவள் கண்கள் இரண்டும் ஜ்வலிக்கின்றன. செவ்விய கனியொத்த அவள் இதழ்கள் மந்தகாச புன்னகையுடன் பூத்துப் பூரித்திருந்தன. அவள் முகத்தில் வியர்வை அரும்பியது. புழுக்கத்தினால் தவிக்கிறவள் போல் "உஸ்...உஸ்" என்று தன் கை குட்டையால் அடிக்கடி வீசிக் கொண்டாள். சில சமயம் தன் கை குட்டையை கீழே போடுவதும் அதை எடுப்பதுமாக இருந்தாள் கணேசனை பார்த்தபடி. வாலிப சேஷ்டையா? காதலின் கொந்தளிப்பா? அவள் தன் நிலை மறந்து ஏதேதோ செய்து கொண்டிருந்தாள். கணேசன் அவள் பார்வையின் பிடிக்கு இலக்காகி விட்டான். அவள் ஒவ்வொரு நிமிஷமும் தன்னை கவனிக்கிறாள் என்பது அவள் நடத்தையே காட்டிற்று. லலிதா வெட்கத்தை விட்டு பார்க்கும்போது கணேசன் பார்க்கக்கூடாது என்ற விதி விலக்கு என்ன? சங்கோசத்தை உதறித் தள்ளி விட்டான். தாராளமாக அவளை ஏற இறங்க பார்த்தான். லலிதாவும் தன் ஓரக் கண்ணால் பார்த்தாள். அமைதி குடிகொண்ட கொட்டகையில் இமை கொட்டாமல் தங்கள் கண்களால் கர்தலை பரிமாறிக் கொண்டார்கள்—வளர்த்தார்கள். அவர்கள் கண்கள், எதையோ உணர்ச்சி வசத்தில் பேசுவதைப் போல் ஒன்றையொன்று நோக்கின.

நடனக் காட்சியிலே புயல் தாண்டவம் ஒன்று தோன்றுகிறது. வெட்கத்தை விட்டு ஓர் ஆடவனை காதலிப்பதாய் யாரும் காட்டிக்கொள்ள மாட்டார்களே! திடீரென்று லலிதாவின் உள்ளத்திலே ஏதோ ஓர் உணர்ச்சி சூறாவளியாக வீசியது. நிதானம் அடைய முயன்றாள். தன் பக்கத்தில் சாந்தா வைத்த கண் வைத்தபடியே நடனத்தை ரசித்துக் கொண்டிருந்தாள். இந்தக் காதலர்களின் கண்ணுறவை—உள்ள உறவை அவள் உற்றுப் பார்க்கவில்லை.

"சே! என்ன முட்டாள் தனம். இளமை, அறிவை இழந்துவிடச் செய்து விட்டது. கண்ட இடத்தில் ஏற்படுவதெல்லாம் உண்மைக் காதலாகி விடுமா? உரம் பாய்ந்த உள்ளத்தில் உல்லாச தென்றலாக நினைத்து விட்டேன் காதலை. அவன் தேஜஸ், முக வசீகரம், இளமையின் மிடுக்கு இவையாவும்

Sri Marganatha Brand

STEEL TRUNK WORKS,

129, N.S.C.Bose Road, Madras-1

Factory: 89, RAJAJIPURAM

Wall Tax Road, Madras-3.

★

MANUFACTURERS OF STEEL TRUNKS, ALLIED PRODUCTS, OF AGRICULTURAL IMPLIMENTS, HOSPITAL REQUIREMENTS, BUILDING MATERIALS AND OTHER IRON AND STEEL MADE PRODUCTS.

●

Branches:

PEACOCK BRAND

Steel Trunk Works,

No. 1, Evening Bazaar, Madras-3.

Sarathy Industries

149, N. S. C. Bose Road,

MADRAS-1.

Prop : K. V. ALWAR.

என்னை ஏமாற்றிவிட்டனவே! அவன் பணக்காரனாய் இருக்கலாம்; பட்டதாரியாகவும் இருக்கலாம்; பார்வைக்கு மன்மதனாகவுமிருக்கலாம், இதற்கெல்லாம் மயங்கியா என் காதலை பறிகொடுக்க முயற்சிக்கிறது? இதனால் என் குடும்ப கவுரவமே சீரழிந்து விடுமல்லவா?" என்று புதுப்புது விமர்சனங்களை கிளறின அவள் உள்ளம்.

மறுகணம் அவள் பார்வை நடனக் காட்சி மீது மோத வாரம்பித்தது. "அவள் தன் கண் வீச்சால் என் மனத்தை பேயாட்டம் ஆடவிட்டு வேடிக்கைப்பார்க்கிறாள். இவள் என்ன புதுமை மோகினியா? இப்படி எத்தனை பேர்வழிகளை ஏமாற்றி வருகிறாளோ! அவள் என்னைப் பார்த்தது குற்றமா? அல்லது நான் அவளை வெறிக்கப் பார்த்தது குற்றமா? அலங்கார மோகத்தில் ஆண்கள் அறிவை இழந்துவிட்டால் அவல நிலையைத்தான் காண முடியும் பெண்களிடம்!" என்று விருக்கென்று எழுந்திருந்து விட்டான் கணேசன்.

ஆம்; கணேசன் எழுந்திருந்தான். ஹாலின் மணி யோசை அலறியது. மணி பத்து இருக்கும். வெற்றி முழக்கத்துடன் மங்களத்திரை வந்து விழுந்தது மேடையில். கொட்டகையில் இருந்து ஜனங்கள் வெளியே போய்க்கொண்டிருந்தனர். மெர்க்குரி விளக்கின் பிரகாசத்தில் மனவேற்றுமை கொண்ட லலிதாவும் கணேசனும் மற்றுமோர் கடைசிப் பார்வையை பரிமாறிக் கொண்டனர்.

கணேசன் தன் குடும்பத்தாரை தன் காரில் வீட்டிற்கு அனுப்பி வைத்தான். வண்டி புறப்படும் தருணம் லலிதா கணேசனுக்கு வணக்கம் தெரிவித்தாள் புன்முறுவலுடன். டாக்ஸி காற்று வேகத்தில் சென்று லலிதா வீட்டை அடைந்தது. லலிதாவும் இறங்கி தன் வீடு போய் சேர்ந்தாள், காரும் கணேசன் வீடு சென்றடைந்தது.

—6—

கனவோ நினைவோ கண்டது பொய்யோ !

ரஞ்சித் மஹாலில் கணேசனைப் பார்த்ததிலிருந்து லலிதாவின் நிலை மாறிவிட்டது. அவள் அமைதி யிழந்து காணப்பட்டாள். எண்ணம் புயலாய் மாறியது. பற்பல கேள்விகள் சம்பவங்கள் அடுத்தடுத்து எழுந்தன அவள் மனத்தில்,

"கணேசன் பி. ஏ. படித்திருக்கிறான்; கணேசன் உண்மையில் என்னை விரும்புகிறான் என்று அறிந்து கொள்வது எப்படி? என் வாழ்க்கையில் விடிவெள்ளியாக பிரகாசிக்கிறான் என்பதை முடிவுசெய்துவிட்டேன். உண்மைக் காதலுக்கு ஜாதியேது? குலமேது? ஏற்றத்தாழ்வுதான் ஏது? செல்வத்திற்காக அல்ல நான் அவனை விரும்புவது. களங்க முற்ற என் கண் முன்னே எழுதாத சித்திரமாக பொலிவுடன் இருக்கிறான். அவனுக்காகவாழப் பிறந்திருக்கிறேன். என் நிலையான எண்ணத்தைஎடுத்துச் சொல்லி உண்மையை விளக்க சாந்தாவை வேண்டலாமா? கூடாது. அதனால் விபரீதமே விளையும். என் விருப்பத்தை தாய், தகப்பனாரிடத்தில் தான் எப்படி பட்டவர்த்தனமாய் சொல்லுவேன்? அவர்கள் நான் தேர்ந்தெடுக்கும் கணவனுக்கு சம்மதம் கொடுப்பதென்றால், மாப்பிள்ளை செட்டியார் மரபில் வந்தவராயிற்றே! ஜாதி குறுக்கிடுமோ என்ற அச்சம் வேறே குறுக்கிடுகிறதே! நான் மலர்; அவர் மணம். மலரிலிருந்து மணத்தைப் பிரித்துவிட முடியுமா? முடியவே முடியாது" என்றெல்லாம் அவள் உள்ளத்தில் ஒன்றன்பின் ஒன்றாக மோதின எண்ண அலைகள்.

குழப்பம் நீடித்தது. பசியில்லை, தூக்கமில்லை, மனத்தில் நிம்மதியிருந்தால்தானே எல்லாம். படுக்கையில் படுத்து புரண்டுக் கொண்டிருந்தாள் லலிதா தன் அறையில். லலிதா சாப்பிடாமல் படுத்துவிட்டாளே என்று சுசீலா தன் மகளை சாப்பிட அழைத்தாள். 'எனக்கு பசியில்லை' யென்று ஒரே மொழியில் பதிலளித்து விட்டாள் லலிதா: அவள் வார்த்தையை உண்மை என்று நினைத்துவிட்டாள் சுசீலா. சுந்தரம் வழக்கம் போல் மகளைப்பற்றி விசாரித்தார். அவளை மறுமுறை தொந்தரவு செய்யவேண்டியதில்லை என்று எண்ணிய சுசீலா சுந்தரத்திற்கு ஆறுதல் சொல்லிவிட்டாள்.

மஞ்சத்தில் படுத்துப் புரளும் லலிதா தன் மனதை வேறு வழிகளில் மாற்றவும் முயன்றாள். ஆனால் தூக்கத்திற்கு பதிலாய் துயரம் தான் பீறிட்டு வந்தது. எப்போது பொழுது விடியும் என்று ஏங்கியவாறு புரண்டு கொண்டிருந்தாள். அதிகாலை நேரம், சில்லென்று குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. சாமக் கோழியும் கூவி விட்டது. அவ்வூர் மாதா கோயிலின் மணி அடித்து ஓய்ந்தது. கொஞ்சநேரம் காற்றில்

வ. உ. சி. கலைக்கூடம்

(சென்னை அரசினர் உதவிப்பெற்றது)

★

தலைவர்களின் சிலைகள்

பொம்மைகள்

சிறந்த வர்ண ஓவியங்கள்

சினிமா ஜோடனைகள்

முதலிய கலைப் படைப்புக்களுக்கு

சிறந்த தோர்

கலைக் கோயில்

விரைவில் திறக்கப்படும்

உரிமையாளர் :

R. T. கிருஷ்ணமூர்த்தி

★

அணுகுக :

வ. உ. சி. கலைக்கூடம்

பூந்தோட்டம்.

35/60, சந்நிதி தெரு, வடபழநி,

சென்னை.

உலாவி வரலாமென்று மாடிக்குச் சென்றாள் லலிதா.

அன்று இரவு

குளத்தில் தாமரை மலர்கள் பூத்திருப்பதுபோல் நட்சத்திரக் கூட்டங்கள் நீலவானில் மினுக்மினுக்கென்று கண்சிமிட்டிக் கொண்டிருந்தன. அந்த ஒளி பள்பளப்பைக் கண்டு ரசிப்பதைவிட என்னைப்பார்த்து பரவசமடையட்டும் மாந்தரினம் என்று விழுந்தடித்துக் கொண்டு சந்திரன் ஓடிவந்தான் வானவீதியில்! நிசப்தமுற்ற இரவில் உலகம் நிம்மதியுடன் கண்ணுறங்கிக் கொண்டிருந்தது! சாம நேரத்தில் மெய்மறந்து தூங்கும் நிலை தானாக ஏற்பட்டு விடுமல்லவா! தனிமை அவளை எள்ளி நகையாடியது. மாடியின் சுவர் ஓரம் சாய்ந்து வானத்துச் சந்திரனை கூர்ந்து பார்த்தாள் பிரமையுடன் லலிதா.

"மனக் குரங்கே! நீ ஏன் அமைதி இழந்து உள்ளத்தை தவிக்க விடுகிறாய்? படித்தவள், அறிவு நிறைந்த பெண், ஒழுக்கத்தின் பிறப்பிடம் என்றெல்லாம் உன் தகப்பன் கனவு காண்கிறார். உன்போக்கைகண்டு விட்டால் உயிரையே மாய்த்துக்கொள்ள தயங்க மாட்டார். உனக்காக வரன்கொண்டு வந்தபோ தெல்லாம் உதாசீனம் செய்து தட்டி கழித்து விட்டாய். நன்றி கெட்டவளே! அத்தனை மாப்பிள்ளைகளில் உனக்கு ஏற்ற மணாளன் இல்லாமலா போய் விட்டார்கள்? அறிவும், செல்வமும் படைத்த மாப்பிள்ளை தேடினாரே சுந்தரம், அவரா முட்டாள்? இல்லை. கருத்தை இழந்து விட்டாய்! களங்க வழியில் போகவும் துணிந்து விடுவாயோ? கௌரவம்என்றால் என்ன என்று கேட்கிறாயே உள்ளத்தை, நீ தான் முட்டாள்! யோசித்துப் பார்" என்று யாரோ சொல்வதைப் போல் எதிரொலித்தது அவள் உள்ளத்தில்.

லலிதா சுற்றி வளைத்துப் பார்த்தாள். சமீபத்தில் எவருமில்லை. காற்றின் வாடை தான் வீசிக்கொண்டிருந்தது. உள்ளம் வெட வெட வென்று நடுங்கியது. சந்திரன் உச்சியை விட்டு மேற்றிசை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான்.

"நிலவே! ஏன் விரைந்தோடுகிறாய்? வானிலே உன்னை அழகாக படைப்பித்தவன் யார்? கவிஞனின் காவியத்திலும், காதலர்களின் உள்ளத்திலும் அழியா ஜோதியாய் இடம் பெறுகிறாய்! நீ காணாதது ஒன்றுமில்லை! உன்னிடம் முறையிடாதவர்கள் உல

இல் யாரும் இருக்கவே முடியாது! அவர்களுக்கெல்லாம் என்ன ஆறுதல் சொல்லுவாயோ! இன்று ஏன் என்னை அலட்சியமாகக் கருதுகிறாய்? என்னை பார்க்கக் கூடாது என்ற எண்ணங் கொண்டு விட்டாயா? நில்! எனக்கு பதில் சொல்லிவிட்டுத்தான் நீபோக வேண்டும்" என்று அவள் உள்ளம் உள்ளூர பேசியது சந்திரனை நோக்கி. என்ன பிரமை. அவள் எங்கே? வானில் ஊர்ந்து செல்லும் சந்திரன் எங்கே?

சந்திரன் சிங்கார புன்னகையுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தான். ஆம், அவனுக்கென்ன, அவன் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசத்தை வாரி வழங்கிக்கொண்டிருப்பவனல்லவா? லலிதா தன் கேள்விக்கு விடை கிடைக்கப்போகிறது என்று எதிர் பார்த்தாள். எப்படி கிடைக்கும்? சந்திரன் பேசுவானா? ஆகாசந்தான் அலறுமா? தென்றல் ஓய்வெடுத்துக்கொண்டு கண்ணுறங்கவாரம்பித்ததுபோலும். சில விநாடிக்குள் வானத்துத் தாரகைகள் பொலிவு குன்றி பிரகாசித்தன; ஏதோ ஓர் உருவம் சந்திரனை விழுங்குவதைப்போல் பேயாட்டம் ஆடிக்கொண்டு விரைந்து வந்தது. அது மேகமானாலும் அசுரனென எண்ணுமாறு அமைந்து காணப்பட்டது. கார் இருளுக்குள் சந்திரன் முடங்கிவிட்டான்! 'சந்திரன் கோழையா? மேகத்தை வெல்ல முடியாதவனா?' என்றெல்லாம் அவள் இளம் உள்ளம் எண்ணியது. வெகுண்ட மனத்துடன் மாடியை விட்டு கீழே இறங்கி வந்துவிட்டாள். நித்திரை லலிதாவை வாவென்று அழைத்தது. சோர்ந்த உள்ளத்துடன் சென்றாள் அவள் கட்டிலண்டை. வாரி அணைத்துக்கொண்டாள் நித்திரை அணங்கு லலிதாவை.

பொழுது புலர்ந்தது. செங்கதிரோன், தன் செவ்விய கிரண ஒளியை வாரி இறைத்த வண்ணம், அடிவானத்தை விட்டு மேற்றிசை சென்று கொண்டிருந்தான். லலிதா இரவு தூக்கமில்லாததால் ஆயாசமாக கண்ணுறங்கிக் கொண்டிருந்தாள். தாய் ஓரளவு அபிமானத்தைக் காட்டினாலும் தந்தை பன்மடங்கு அபிமானங் கொண்டவரானதால் மகள் வழக்கம் போல் அதிகாலையில் எழுந்திராததைக் கண்டு கவலையோடு விசாரித்தார். 'இரவு தூக்கம்பிடித்திராது, சாமத்தில் கண்ணயர்ந்திருப்பாள்' என்று தாய் சமாதானம் கூறினாள்.

(வளரும்)

Phone : 3619

Star Steel Trunk Works,

★

MANUFACTURERS OF

Star of India Steel
Cabin & Suit Cases

305, N. S. C. B. Road,
MADRAS-1

★

OFFICE :

84, Mint Street, Madras-3

★

ஸ்டீல் டிரங்க், சூட்கேஸ், பிலிம் ரேக்குகள், பாக்ஸ்கள் கேபின் ரகங்கள், விவசாயக் கருவிகள், பக்கட்டுகள், பில்டிங் சாமான்கள் ஆர்டர் பேரில் தயாரித்துத் தரப்படும்.

PROPRIETOR :

H. A. கான்,

வானவெளிப் பயண விமானம்

1959ம் ஆண்டுத் தொடக்கத்தில் ஒரு புதிய விமானம் கலிபோர்னியாவிலுள்ள எட்வர்ட்ஸ் விமானப் படைத் தளத்திலிருந்து கிளம்பும். அதில் மனிதன் இதுவரை செல்லாத உயரத்துக்குச் செல்வான். இதுவரை எந்த விமானமும் பறக்காத வேகத்தில் அது பறக்கும்.

அது விநாடிக்கு ஒரு மைலுக்கு அதிகமான வேகத்தில் செல்லும். நியூயார்க் நகரிலிருந்து லாஸ் ஏஞ்சல்ஸுக்கு அது 40 நிமிஷத்தில் போய்விடும். பூமி சுழலும் வேகத்தைக் காட்டிலும் அந்த விமானம் பறக்கும் வேகம் அதிகம். நியூயார்க் மணிக்கும் லாஸ் ஏஞ்சல்ஸ் மணிக்கும் மூன்று மணி நேர வித்தியாசம் உண்டு. ஆதலால், நியூயார்க்கிலிருந்து அந்த விமானம் நடுப் பகல் 12 மணிக்குக் கிளம்பினால், லாஸ் ஏஞ்சல்ஸில் அன்று காலை 9.40 மணிக்குப்போய்ச் சேரும். நியூயார்க்கில் விமானி நடுப்பகல் உணவு உண்டு புறப்பட்டால், அவர் லாஸ் ஏஞ்சல்ஸ் போய்ச் சேரும் போது அங்கு அது காலை உணவு நேரமாக இருக்கும்.

வானவெளி இரகசியங்களைக் காண்பதற்கு மனிதன் ஓட்டிச் செல்லும் முதல் விமானம் இதுவே. அது குறைந்தது நூறு மைல் உயரம் செல்லும் என்று எதிர் பார்க்கிறார்கள். இது மேலே கிளம்பி வானவெளிக்குச் சென்று பறந்து கீழே பூமியின் ஆகாய மண்டலத்தில் புகும்போது கொல்லன் உலைக் களத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பைப் போல செக்கச் செவேரென்றிருக்கும். இந்தப் புதிய விமானத்தின் பெயர் எக்ஸ்-15. (x-15)

புதுவகையான துரு ஏறாத எஃகினால் (ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்) இது செய்யப்பட்டுள்ளது. ஆதலால் மிகுதியான வெப்பத்தை இது தாங்கும். கலிபோர்னியாவில் லாஸ் ஏஞ்சல்ஸிலுள்ள நார்த் அமெரிக்கன் ஏவியேஷன் தொழிற்சாலையில் இந்த ஆராய்ச்சி விமானம் செய்யப்பட்டுள்ளது.

பாரன்ஹீட் முறையில் 1000 டிகிரிக்கு மேற்பட்ட வெப்பத்தையும், பூஜ்யத்தை விட 300 டிகிரிக்கும் குறைவான கடுங்குளிரையும் தாங்கும் ஆற்றல் உள்ளது இந்த விமானம்.



உண்மைச் சம்பவங்கள்!

[தொடர் நிகழ்ச்சிகள்]

1950-1953-ல் சுதந்திர கொரியாவைப் பாதுகாக்க அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் போலீஸ் கோஷ்டியில் சேர்ந்தது. இந்த சுதந்திர நாடு கம்யூனிஸ்ட் வட கொரியாவினால் முற்றுகையிடப்பட்டது.



.953-ல் ஜனாதிபதி ஐஸன்ஹோவர் ஐக்கிய நாட்டு சபையில் சமாதானத்திற்கு அணுசக்தியென் பதுபற்றி பேசினார். 1957 ஜனாதிபதியின் தீர்மானப்படி 21 நாடுகளோடு அணுசக்தி ஏஜன்ஸி ஸ்தாபனம் நிறுவப்பட்டது.

1964-ல் அமெரிக்காவும், இதர சுதந்தர நாடுகளும் மேற்கு ஜர்மனியை சுதந்திர ஜன நாயக நாடாக்குவதில் உதவின. மேற்கு ஜர்மனி நாட்டோவில் சேர்ந்தது. கிழக்கு ஜர்மனி மாஸ்கோவின் பிடியில் சிக்கியுள்ளது.

1956-இராணுவங்கள் நடமாட்டத்தை கண்ணோட்டமிட திறந்த வானவெளி திட்டத்தை ஜனாதிபதி ஐஸன்ஹோவர் அனுமதித்தார். அதன்படி சோவியத் யூனியனும் செய்யலாம். ஆனால் கிரம்லின் மறுந்து விட்டது.

1957-ல் பாரிசவாயுவினால் கைகால் விழுந்து போனவர்களுக்கானமருந்தை டாக்டர் ஜோனாய் ஈசால்க் என்பவர் கண்டு பிடித்துள்ளார். அதனால் பலர் நன்மை யடைந்துள்ளனர்.



1957-1958-ல் அமெரிக்கா 65 நாடுகளோடு சேர்ந்து பூமி, கடல் பிரபஞ்ச வெளித்தோற்றம், சூரியன் இவைகளைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு செயற்கை சந்திரனுக்கான தகவல் சேகரித்துள்ளது.

சுபம்

உலக விநோதங்கள்

அயர்லாந்து ஆஸ்பத்திரிகளில் தான் பெரும் அளவில் நோயாளிகளுக்கான படுக்கை வசதிகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் 67 பேரே அனுமதிக்கப்படுகின்றனர். சிறந்த கவனிப்புக்கு இதுதான் வழியாகு மல்லவா?

அமெரிக்க விஞ்ஞானியான டாக்டர் ஜோனஸ் ஈ ஸால்க் என்பார் கண்டு பிடித்த பாரிசவாயு நிவாரண மருந்து 80-சத நோயாளிகளை குணப்படுத்தி விட்டது. 1855-ல் கண்டுபிடிக்கப்பட்டு 56 நாடுகளில் பரவியது.

நத்தை ஊர்வதுபோல என்பது பழமொழியல்லவா? மணி யொன்றுக்கு 000353005 வேகத்தில் செல்கிறது. அதாவது மணிக்கு 22 அங்குல தூரம். நுட்பக் கணக்கின்படி 1 மைல் செல்ல 2833 மணியாகும்.

வானசாஸ்திரிகள் தங்கள் தூரதர்சினியை (டெலஸ்கோப்பை) பார்க்கமாத்திரம் உபயோகிக்கவில்லை. மனிதக் கண்பார்வைக்கு தென்படும் அளவுக்கு 'வானவிநோதங்களைப் படம்பிடிக்கவும் உபயோகிக்கிருர்கள்.

அமெரிக்கன் மேரியன் ''பேட்'' போலிங் என்ற விமான போட்டி, ஒற்றை இஞ்சின் பூட்டிய விமானத்தில் மணிலாவிலிருந்து புறப்பட்டு பெண்டல்டன், ஒரிகான் என்ற6890 மைல் தொலைவிலுள்ள விடத்தை 46 மணி நேரத்தில்அடைந்தார்.

நமதுஉலகம் 5 கண்டங்களாயும் 100, 000 தீபகல்பங்களாயும், 200 தேசங்களாயும் உள்ளன. 2, 500 கோடி. ஜனங்கள் வாழும் இந்த தேசங்களில் 1000 'பாஷைகள் பேசப்படுகின்றன. 500 மதச் சார்புள்ள நாடுகள் உள்ளன்.

(தொடரும்)

வாழ்வின் உண்மை

'வள்ளுவன் தன்னை உல கினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று பாரதி சிறப்பித்துக் கூறுகிருன். மேனுடுகளில் 'ஆசிரியர்' பெயராலேயே அவர்கள் ஆக்கமும் அழைக்கப் பெறுதல் பெரும்பாலும் நிகழ்கின்றது. வள்ளுவனை வாழ்த்தும் முகமாக 'குறளினை' குன்றளவு சிந்தை சிறக்கப் போற்றுகின்ருன்.

வாழ்வின் வரையறையாது? உலகில் ஜனித்த எவருக்கும் எதுவும் சாஸ்வதமில்லை. ஆங்கிலத்தில் 'Man is Mortal' என்பர். ஆனுல் அவர் தம் அரும் செய்கைகள்-நற்செயல்கள் அழிவதில்லை. மாருக, அச்செயல்கள் அவற்றைக் கேட்கும்தோறும், காணும் தோறும் அவர்கள் புகழைப் பாடி 'அவர்கள்' பெயரை நினைவு கூறச் செய்கின்றன.

காந்தியார் இன்று உயிருடன் இல்லை. ஆனுல், 'அஹிம்ஸை' என்றதும் அவர் நினைவில் எழுகிருர். ஆயுட்காலத்தில் மூவாயிரம் 'புதிய' கண்டுபிடிப்புகள் நிகழ்த்திய தாமஸ் ஆல்வா எடிஸன் உயிருடன் இல்லை. ஆனுல் அவர்தம் 'கண்டுபிடிப்புகள்' காலத்தால் இறவாதனவாய் அவரை 'சிரஞ்சீவி' யாக்கியிருக்கின்றன.

ஸ்ரீ சத்ய மூர்த்தியும் ஸ்ரீ சியாம் பிரசாத்முகர்ஜியும் பாராளுமன்றப்பேச்சு வன்மையுடன் இணைந்தவர்கள். மார்க்கோனி என்றதும் ரேடியோ (கம்பியில்லாத் தந்தி), நினைவில் வருகிறது எனவே 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற உண்மைக்கு குறிப்பீடாகக் கூறத்தக்கவராதல் வேண்டும் என்ற எண்ணம் இதயத்தே எழுவது சகஜம்.

எல்லோருமே 'புதியன' கண்டு பிடிக்கத்தக்க மூளை' வலுவுடையராயினும் நிகழ்ச்சியில் அஃதுஇல்லை—வாய்ப்போ வசதியோஒவ்வொருவர் வாழ்விலும் மாறுபாடுடையதாவதாய் இருப்பினும் எண்ணத்தால், இயல்பால், சொல்லால் செயலால் உயரல் இயலும் ஒன்றே.

பி. எஸ். பார்த்தசாரதி

மனிதன், 'உயரவேண்டும், மேலும் உயரவேண்டும்' என்ற உடன் பிறந்த உயர் நோக்குடையவன் ஏன்? எப்படி? என்ற வினக்களை எழுப்பி விடைகாண விழையும் 'அறிவு' கொண்டவன் எனவே மனிதன் உயர்தலும் தாழ்தலும் வாழ்தலும் வீழ்தலும், வளர்தலும் தளர்தலும் அவனிடமே அடங்கியுள்ளது.

''வெள்ளத் தனைய மலர்
நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு''

தடாகத்துத் தாமரையின் தண்டு வாவியில் நீர் வற்ற வற்ற தண்டு குறுகாதவாறு மடிந்து சுருங்கியும், நீர்ப் பரப்புமேல் எழ எழ நீண்டும் செல்லும் இயல்புடையது. அதுபோல ஒருவனது உயர்வும் தாழ்வும் அவனது 'உள்ளத்தைப் பொறுத்தது. தக்கவழியில் காலமறிந்து முயன்ற முயற்சியின் பயன் என்றும் வளர்ச்சி குறையாது.

உயர்ந்த நோக்கு, உயர்ந்த எண்ணம் உயரிய செயல் கொண்டு முயலவேண்டும். முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும். குறிப்பிட்ட சமயத்தில் குறிப்பிட்ட ஒன்றைச் செய்யத் தவறுவதன் மூலம், ஒருவனது உத்தியோகத்திற்கு ஊறு வருவதாக வைத்துக் கொள்வோம். அவன் தன் 'முயற்சியை' செய்திருந்தால் அது 'திரு' வாக-நன்மையாக முடிந்திருக்கலாம். அன்றி 'இன்மை' எழுதலும் தவிர்ந்திருக்கும்.

உள்ளத்திலே உன்னி முடிக்க முயல்கையில், தொடங்கிய செயலைத் தொடர்கையில், இன்னல்கள், இடுக்கண்கள் எத்தனையோ எதிர்ப்படலாம். அவற்றை யும் மலர்ந்த முகத்தோடு-புன்சிரிப்புடனே 'துன்பமே போ எனச் சொல்லி' நகும் சக்தியும்.

''இலக்கம் உடம்பிடும்பைக்
கென்று கலக்கத்தைக்
கையாருக் கொள்ளாதாம்
மேல்''

என்பதன் பொருளைப்

புரிந்து உளம் வலுப்பெற்றிருத்தல் வேண்டும்.

"அடுக்கிவரினும் அழிவி
ல்லான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும்"

துன்பம் வரும்பொழுது கண் இடுங்குவதால் இடுக்கண் (இடுங்குகண்) எனப்பட்டது.

உலகில், இவ்வுடலும், வாழ்வும், துன்பங்கட்கு உட்படுதல் இயல்பு—அவற்றை எதிர்நோக்குவது இயற்கைக்கு முரண்பட்ட ஒன்றன்று என்ற இயற்கை நியதியைப் புரிந்து கொண்டவனை அணுகும் இடுக்கண் இடுக்கணுறும். ஏன்? அவன் வெற்றியின் விம்மிதம், தோல்வியின் துவளல் இரண்டிற்கும் அப்பாற்பட்டிருப்பதால்.

விதந்தறும் இன்னல் கோடி விளைந்து அழித்திட முயன்றிட்டாலும் தொடர்ந்து செயல் வேண்டும். எடுத்த காரியத்தை 'எங்கும் வெற்றி எதனிலும் வெற்றி, எடுத்த காரியம் யாவினும் வெற்றி' என பீடு நடை போட வேண்டும்.

"மடுத்தவா யெல்லாம் பக
டன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடுடை
த்து"

களரும், அளரும், மணலும், காடும் போன்ற பல் திறப்பட்ட, மேடு பள்ளங்கள், சீர் செப்பமிராப் பாதைகள் பலவற்றிலும், மருங்கு ஒற்றியும், மூக்கு ஊன்றியும் தாள் தவழ்ந்தும் மெய்வருத்தம் பாராது சகடம் ஈர்க்கும் பகடு (எருது) போல் தளராத முயற்சியுடையவனை இடுக்கண்ணால் தாக்க இயலாது—வெற்றியின் விம்மிதம், தோல்வியின் துவளல் இரண்டிற்கும் அப்பாற்பட்டவனாதலால்.

மாடு என்றால் செல்வம். செல்வம்—நில்லாதது. தொடர்ந்து செல்வது. நாமும் தொடர்ந்து செல்ல வேண்டும். துன்பம், துயர், இடர் ஏசல் எதுவரினும் எதையும் தாங்கும் இதயமுடன்.

"இன்பத்துள் இன்பம்விழை
யா தான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்"

இன்று பாங்கான பங்களா வாசம் கிட்டிவிட்டது எனக் குதித்துக் கொட்டமும் கும்

M. சுப்ரமண்யம் அண்டு பிரதர்ஸ்

(ஞானம்பிகா பிராண்டு)

ஸ்டீல் டிரங்க்கு வியாபாரம்

மூர்மார்கெட், சென்னை-3.

———

(அரசாங்க அங்கீகாரம் பெற்ற பேப்ரி கேட்டர்கள்)

எங்களிடம் கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயார் செய்த நல்ல ஸ்டீல் சூட்கேஸ், கேபின், பிலிம் பாக்ஸ், இன்னும் இதர டிசைன்கள் ஆர்டரின் பேரில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

ஞானம்பிகா பிராண்டு ஸ்டீல் டிரங்க்கு பெட்டிகளை உபயோகியுங்கள்.

பேக்டரி: **நெ. 52, சைடன்ஹாம்ஸ் ரோடு, சென்னை-3**

ஷாப்: **நெ. 15-A பிளாக்கு மூர்மார்கெட், சென்னை-3.**

இங்ஙனம்.

M. சுப்ரமண்யம் அண்டு பிரதர்ஸ் (பார்ட்னர்ஸ்)

M. கோவிந்தசாமி

M. ராதாகிருஷ்ணன்

மாளும் இடாமல் இருப்பவன் நாளை 'பாங்'கிற்குத் தீங்கு வந்தாலும் பதறமாட்டான். ஏன்? ஒரே உள்ளம் கொண்டிருப்பதால் பங்களா போகலாம்—குடிசை கட்டலாம். ஆனால் அவற்றை அனுபவிப்பவன் ஒருவனே, உள்ளம் ஒன்றே சமநோக்கு. இன்பமும் துன்பமும் இயல்பானவை என எண்ணமுடையவனாயிருப்பவன்.

சுகமும் துக்கமும் எங்கும் இல்லை. இங்கு நம் இதயத்தே எழும் உணர்ச்சி அலைகளே.

கோடைகாலம். நாவரல்கிறது. 'ஐஸ்கிரீம் சாப்பிட்டால் தேவலை என்ற நினைப்பு தோன்றுகிறது. ஐஸ் கிரீம் சாப்பிட நாலணா ஆகும். பர்க்கெட்டில் இருப்பதோ 'அரையணா என்றால்...? ஐஸ்வாட்டருக்கும் பழுதில்லை. பஞ்சமில்லை. அதுதான் கிட்டக்கூடியது.

'பரவாயில்லை; இரண்டின் பயனும் குளிர்ச்சி' தருதலே, பயன் ஏறத்தாழ ஒன்றே. இதுவுமில்லாதவர் எத்தனை பேர்? என்ற நினைவு வருகிறது என்று வைத்துக் கொள்வோம். உள்ளத்திலே 'இவ்வளவாவது' கிட்டியதே என்ற 'இன்பம்—திருப்தி' எழுகிறது. 'ஐஸ் கிரீம்' சாப்பிட முடியவில்லை—கையில் காசு குறைகின்றதே' என்ற துன்பம் இன்பமாகி விடுகிறது:'] உள்ளத்து உணர்ச்சிகள் தாமே இன்பமும் துன்பமும்?

இந்த உண்மைகளை உள்ளத்தில் ஊன்றி, ஆழ்ப்பதித்து, உள்ளுவன வெல்லாம் உயர்ந்தனவாகி, எண்ணித் துணிந்து, இடம், காலம் அறிந்து மனத் திட்பத்துடன், தோல்வியில் துவளாது, கலங்காது, கண்ட வினைகட்டுறங்காது, தூக்கம் கடிந்து செயல்வேண்டும்.

'வெற்றி, முடிவு இல்லாத செயல் எதுவும் இவ்வுலகில் இல்லை. ஒன்றின் முடிவாகப் படுவது மற்றதன் துவக்கமாக, ஆரம்பமாகத் தொடர்கிறது. இந்த தர்மமே 'உலக வாழ்வை' அஞ்சாது நோக்கும் ஆண்மை தருகின்றது' என்கிறான் கண்ணபிரான். துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை.

அடுத்தடுத்து அல்லல்களும் துன்பங்கள் தொடர்ந்தாலும் மலை உறுதியுடன், இதய வலிவுடன் 'இன்பம் இறுதியில் எனதே' எனத் துணிந்து செயலாற்றல் வேண்டும்.

கடமை வழுவாது கடமை காப்போராக மாறுகையில் வெற்றி வீடு தேடி வரும். இடுக்கண்ணுற்றபோதும், துன்பத்தை இன்பமாகக் கருதி, வெயிலை வெண்ணிலவு தண்ணிலவாகக் கருதி, எக்கத்திலும் ஊக்கம் குன்றாது, எதிர் நீச்சிட்டு ஆக்கம்' உடையவனைத் தேடி அவன் 'வீடு' எங்கே என வினவி வெற்றித்தாய் வருவாள்.

''ஆக்கம் அதர் வினாய்ச்
செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையானுழை''

எனவே 'இன்பம் துன்பம்' இரண்டிலும் சமநோக்கு கொண்டு அசைவிலா ஊக்கமுடன் 'உழை' என உரைக்கும் வேத விளக்கம் விளங்கி வாழ்வின் வெற்றி—வளம், வேதனையிலும் சாதனை காணும் திறன் பெறும் வாழ்வின் உண்மை' உணர்ந்து உத்தர வேத ஒளி வழி நடப்போம் நாமனைவரும்.

பாஸ்'டின்

20 E.

பூச்சிக்கொல்லி எண்ணை

சகலவிதமான பயிர்களில் விழும் பூச்சி புழுக்களையும், மூட்டைப் பூச்சி, கொசு, கரப்பான், ஈ முதலிய விஷ கிருமிகளையும் கொல்ல சிறந்த மருந்து

உபயோகிக்கும் விதம்: ஒரு அவுன்ஸ் எண்ணையை 4.5 கேலன் தண்ணீருடன் நன்றாகக் கலந்து, பயிர்களின் மேல் நன்றாகப்படும்படி தெளிக்கவும்.

மூட்டை, கொசு, கரப்பான் ஈ இவைகளுக்கு 1 அவுன்ஸ் எண்ணையை இரண்டு பாட்டல் அதாவது 40 அவுன்ஸ் மண்ணெண்ணையில் கலந்து பம்பினால் அடிக்கவும்.

எச்சரிக்கை: இது விஷமுள்ளதாகையால் உபயோகிக்கும்போது புகை பிடிக்கக் கூடாது. உபயோகித்தபின், கை, கால்களை நன்றாகச் சுத்தம் செய்து கொள்ளவும். காலி டின்னை வேறு எதற்கும் உபயோகிக்கக்கூடாது. திறந்தபின் மூடியை மறுபடியும் இறுக்கி மூடி, குளிர்ச்சியான ஈரமில்லாத இடத்தில் வைக்கவும்.

தயாரிப்பாளர்கள்:

டாட்டா பைசன் பிரைவேட் லிமிடெட், பம்பாய்.

வினியோகஸ்தர்கள்:

வி. கே. வேணுகோபால் அண்டு கம்பெனி

183, மவுண்ட் ரோட், சென்னை-2

Manufactured by:

TATA FISON PRIVATE LTD.
BOMBAY.

Sole Stockist:

V. K. VENUGOPAL & CO.

183, Mount Road, Madras-2

பரிசும், பாவையும்

"ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்ருகும்" என்பது பழமொழியல்லவா? அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து பரிசுக்கதை எழுதிய மீனுவுக்கு எதிர்பாராத தொல்லையே நேர்ந்தது. எந்தக்கதையில் அவள் தொல்லையில் சிக்கித் துயரப்பட்டாளோ, அந்தக் கதையால் அதிர்ஷ்டத்தையும் பெற்ருள்; ஆனந்தத்தையும் அடைந்தாள். எளிய தமிழில் பின்னப் பட்ட இனிய சம்பவம். ஆ—ர்.

அரைமணி நேரம் விடாது பெய்த மழைத்தூரல் இன்னும் விட்டபாடில்லை. கூடத்தில் நிரம்பிப் போன மழை நீரை வெளியேற்றுவதில் ஈடுபட்டிருந்தேன்.

"மாமி!"

என்ற பிஞ்சுக் குரல் கேட்டுத் திரும்பினேன். அப்போது பக்கத்துத் தெரு பங்கஜ மாமியும், அவள் மகள் விமலாவும் கையில் குங்குமச் சிமிழுடன் நின்று கொண்டிருந்தனர்.

"இன்றைக்கு நம்ம ஆத்திலே நிச்சயதார்த்தம்; மறக்காம வரணும் மாமி!"

"ஆகட்டும்!"

"கண்டிப்பாய் வந்துடுங்க! கமலம் உங்கக்கிட்டச் சொல்லச்சொன்னு!" பங்கஜம் மாமியின் குரலில் அன்பு தெறித்தோடியது.

"கண்டிப்பாய் வருகிறேன்!" என்றவாறே குங்குமத்தை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டேன்.

நிச்சயதார்த்தம் முடிந்து எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தோம், கமலாவைக் கேலி செய்து கொண்டு அறையில் உட்கார்ந்திருந்தேன் நான்.

"ஏண்டி! இனிமே மீனு அவ்வ புருஷன் வீட்டுக்கே போக மாட்டாளா?" யாரோ ஒரு பெண்ணின் குரல் இப்படிக் கேட்டது.

"இம்! அவன் தான் இவளை வாழா வெட்டியாக ஆக்கிவிட்டானே!" மற்ருெரு பெண் குரல் இது.

நெஞ்சிலே நெருப்பை அள்ளிக் கொட்டினுல் எப்படி இருக்கும்? தாங்கக்

"மீனு"

கூடிய்நா இதயம்! நான் எப்படி இருந்தால் இவர்களுக்கு என்ன? நான் வாழாமல் வதை படுவது அவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறதா? கடவுளே! காரணம் இல்லாமல் பிறர் துன்பப்படுவதைக் கண்டு மகிழும் மாபாவிகளும் இருக்கத்தானே செய்கிருர்கள்!

"ஏன் மீனு, என்னமோ போல் ஆகிவிட்டாய்?" என்னுடைய வேதனையில் பங்கெடுத்துக் கொள்ள விரும்பினுள் கமலா, தன் கணவருடன் ஆனந்தமாய் வாழ்த் துடிக்கும் அவளிடம் ஏன் நம்வேதனையைச் சொல்லி துன்பமடையச் செய்யவேண்டும்?..........."

"ஒன்றுமில்லை கமலா! ஏதோ நினைவு! நான் போய் வருகிறேன்" என்று எழுந்தேன். உயிருக்குயிராய் பழகிவிட்ட அவள் நான் சாப்பிடாமல் போக விடுவாளா?

கடிகாரத்தில் மணி பன்னிரெண்டு அடித்து ஓய்ந்தது. "ஏண்டி விளக்கை அணைத்து விட்டு தூங்கேன்! இத்தனை நாள் இல்லாத விசாரம் இப்போ என்ன வந்திருச்சு!" பத்து மாதம் படாதபாடு பட்டு சுமந்து பெற்று எலும்பு கடித்தால் கூட என்னமோ ஏதோ என்று துடி துடித்துப்போய் கண் போல் காப்பாற்றிய அதே தாய் தான் இப்போது இப்படி கடுமொழி கக்குகிருள். ஏன்?

பெற்றவளும், பெற்றவளிடமிருந்து பெற்றுக்கொண்டவர்களும் என்னைத் தூற்றும் அளவுக்கு நான் என்ன செய்துவிட்டேன்!

ஆரம்பத்தில் அவர்..................

தம் பெற்ருேர்களுடன் என்னைப் பெண் பார்க்க

வந்தபோது குல வழக்கப்படி (பாட்டு) பாடி விட்டு மெல்ல தலை நிமிர்ந்தேன். சுழன்று திரும்பிய என் கண்களுக்கு அவர் தாம் முதலில் தென் பட்டார். இரும்பை காந்தம் இழுப்பதைப் போல் வசிகரம் கொந்தளிக்கும் அவர் முகத்தில் வட்டமிட்ட அந்த இரண்டு விழிகளும் என் கண்களை மாத்திரமல்ல. கருத்தையும் கவர்ந்து விட்டன.

தலை நிமிராமல் அறைக்குள் வந்துவிட்ட பிறகும் அவரைச் சுற்றியே வட்டமிட்டது என் இதயம்.

அடுத்த மூன்றாவது வாரம் அவரையும், என்னையும், சதிபதிகளாக்கி வைத்தார்கள் பெரியவர்கள்.

சென்னை தியாகராய நகரில் நாலைந்து குடும்பங்கள் உள்ள ஒரு வீட்டில் நாங்களும் குடியேறினோம். சென்னைக்கு நான் புதிது தான். அதற்காக இப்படியா பணத்தைச் செலவழித்து ஊரெல்லாம் என்னை இழுத் தடிக்க வேண்டும்? ஆறு மாதங்கள் தினமும் சினிமாப் பார்ப்பதும் நாடகம் பார்ப்பதுமாகவே சென்றன. நூறு ரூபாய் சம்பளத்தில் இப்படியெல்லாம் செலவு செய்தால் எப்படிக் குடும்பம் நடத்துவது?'' என்று நான் கேட்டபோது ''சம்பளம் குறைவாக இருப்பதால் நாலு இடத்துக்குப் போய் நல்லதை பார்க்காமல் இருக்க முடியுமா மீனா?'' என்று சொல்லி என் வாயை அடக்கி விடுவார்.

க்ஷண நேர இன்பத்துக்காக கற்பைப் பறிகொடுத்து விட்டு பழிச் சொற்கள் தாக்கும் போது தவறை எண்ணிக் கண்ணீர் விடும் கன்னிப் பெண்ணைப் போல, செலவழிக்கும் போதெல்லாம் உணர முடியாத நெஞ்சம் கடன் கொடுத்த மார்வாடி மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு கைத் தடியைச் சுழற்றியபடி வீட்டின் முன் வந்து வேதனை தரும் போது தான் அவர் உணர ஆரம்பித்தார்.

''அன்றே சொன்னேனே கேட்டீர்களா? இன்றைக்கு நாலுபேருக்கு முன்னால் உங்களை கடன்காரன் வந்து கேட்பதை என்னால் சகிக்க முடியவில்லையே'' என்று புலம்பினேன்.

''அட மண்டு! சென்னையில் இதெல்லாம் சர்வ சாதாரணம்! இதற்கெல்லாம் நீ அழலாமா!'' என்று என்னைத் தேற்றி விட்டு ஆபீஸுக்கு போய் விட்டார்.

முதல் தேதி சம்பளம் ஐம்பது ரூபாயைக் கொண்டு வந்து கொடுத்தார். நான் காரணம் கேட்பதற்கு முன்பே மார்வாடிக்கு மாதம் 50 ரூபாய் கொடுப்பதாக ஏற்பாடு செய்து கொடுத்து வருகிறேன் என்றார். எனக்குப் பகீர் என்றது. ஐம்பது ரூபாயில் வீட்டுவாடகைஇருபது ரூபாய் போக முப்பது ரூபாயில் எப்படி காலம் தள்ளுவது?

வறுமை எங்கள் குடும்பத்தையும் அரவணைத்துக் கொண்டது. துன்பம் வந்தால் தொடர்ந்து வரும் என்பார்களே, அது எங்கள் குடும்பத்தைப்பொறுத்த வரையில் உண்மையாகி விட்டது. 'டைபாய்டு' காய்ச்சல் வேறே அவரைப்பற்றிக் கொண்டது. டாக்டரைக் கூட்டி வந்து பார்க்க பணம் இல்லாமல் என் காதுத்தோடுகளை முப்பது ரூபாய்க்கு அடகு வைத்து விட்டதை அவரிடம் நான் மறைப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

நான் நினைத்துக்கூட பார்க்கவில்லை அவர் இப்படி ஆவார் என்று. ஆம்! அவ்வளவு கஷ்டப்பட்டார். காலையில் சாப்பிட்டு விட்டு அலுவலகம் போனால் மாலையில் வீட்டுக்கு வந்து தான் சாப்பிடுவார். கடையில் காப்பிகூட குடிப்பது இல்லையாம்: வேதனையால் துவளும் இந்தச் சமயத்தில்தான் அகில இந்திய சிறுகதைப் போட்டி விளம்பரத்தை பத்திரிக்கையில் பார்த்தேன். முடிவு தேதி ஒன்பது மாதம் இருந்தாலும் முயன்று பார்ப்போம் என்று எண்ணி எழுத ஆரம்பித்தேன். ஒரு கடிதத்தில் இருந்து ஆரம்பமாவதுபோல் கதை. கதையை முழுதும் எழுதி முடிக்கவில்லை. அதற்குள் பக்கத்து வீட்டுப்பெண் கோவிலுக்குக் கூப்பிடவே அப்படியே வைத்துவிட்டுப்போய் விட்டேன். திரும்பிவரும்போது அவர் நாற்காலியில் படுத்திருந்தார்.

''ஏன் என்ன செய்கிறது!'' என்று கேட்டேன் அவர் தலையைத் தொட்டுப்பார்த்தபடியே. ''தொடாதே! துரோகி! போய் விடு என் அருகிலேயே வராதே!'' என்று இரைந்தார்.

''ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? இப்போதுஎன்ன நடந்து விட்டது'' என பயந்துபோய் கேட்டேன்.

''என்ன நடக்கவேண்டும் இனிமேல்; மிருகத்தை

விட கேவ்லமான உன்னை என் இதயத்தில் வைத்துப் பூஜித்தேனே! அதற்கு என்னைத்தான் தண்டித்துக் கொள்ள வேண்டும்!"

"ஐயோ! நான் என்ன செய்து விட்டேன் அப்படி?"

மீனு! போய் விடு. என் கண் முன்னால் நிற்காதே. அப்புறம் நான் என்னசெய்வேன் என்று எனக்கே தெரியாது! இம்! போ!" என்று குதித்தெழுந்தார்.

ஒன்றுமே புரியாத நிலையில் வந்து விட்டேன். அன்று ஆரம்பித்தவர்தான். அடித்தார், உதைத்தார், திட்டினார். என் முகத்தில் விழித்தாலே பாவம் என்று சொல்லி என்னை பிறந்தகத்தில் கொண்டு வந்து விட்டுப்போனவர்தான். கடிதத்தின் மேல் கடிதம் போட்டேன். காரணம் கூட தெரிவிக்க மறுத்துவிட்டார். எனக்கே புரியவில்லை அவர் மனமாற்றத்துக்குக் காரணம் என்னவென்று?..."

ஆமாம் புரியாத நிலையில் தான் இன்று பெற்ற தாயிடம் கூட கடு மொழியை வாங்குகிறேன் கடந்த எட்டு மாதங்களாக.

* * *

பொழுது விடிந்து நாலு நாழிகை ஆகி விட்டதே! இன்னுமா தூக்கம்! எழுந்திரு!".

அம்மாவின் வசை மொழி கேட்டு எழுந்து குளிப்பதற்காக கூடம் வழியே செல்ல வந்தபோது வாசலில் வண்டி சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அவரே தான் வந்து இறங்கினார். அவரைப் பார்க்கவே வெட்கமாய் இருந்தது எனக்கு. தலையைக் குனிந்தவாறே உள்ளே செல்லத் திரும்பினேன்.

"மீனு..." ஏக்கம்தொனித்தது அவர் குரலில். திரும்பி தரையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இதற்குள் அப்பா வந்துவிடவே நான் உள்ளே சென்றுவிட்டேன்.

அன்று இரவு அறையில் பாலைக் கொண்டு போய் வைத்துவிட்டு மெல்ல திரும்பினேன். "மீனு!" அன்பும் பாசமும் பீறிட்டது அவர் என்னை அப்படி அழைத்த போது. அவர் என் அருகே வந்து ஒரு காகிதத் துண்டை என் கையில் கொடுத்தார். அதை வாங்கி பிரித்துப்பார்த்தேன். என் பெயருக்குப் போடப்பட்டுள்ள ஆயிரம் ரூபாய் "செக்" காகிதம் அது.

"என்னது? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே?" கடந்த காலத்தை எல்லாம் மறந்து அவருடன் மறுபடியும் அன்பாக பேச ஆரம்பித்தேன்.

"உனக்குக் கிடைத்தபரிசு மீனு இது!"

"என்னசொல்கிறீர்கள்?...

"சொல்கிறேன் மீனு. ஆனால், முதலில் என்னை மன்னித்து விட்டதாக ஒரு வார்த்தை சொல்?"

"அத்-தா-ன்!"

அகில இந்திய சிறுகதைப் போட்டியில் உன்னுடைய "துரோகம்!" என்று கதைக்கு முதல் பரிசு கிடைத்திருக்கிறது. நீ கதைக்காக எழுதி வைத்திருந்த கடிதத்தைப் படித்துவிட்டுத் தான் உன்னைத் தவறுதலாக நினைத்து விட்டேன். பரிசுத்தமானவளான உன்னை பழுது பட்டவளாய்த்தீர்மானித்தேன். அதன் பயனாய் நீ அவதிப்பட்டாய், அவசர புத்தியால் இந்தப் பாவி உனக்கு துரோகம் செய்து விட்டேன்" என்று அவர் சொன்னபோது "அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்!' என்று அவர் வாயைப் பொத்தினேன். அவர் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடியது.

"பத்திரிக்கையில் வெளி வந்த உன் கதையைப் படித்த பிறகு தான், உன் தூய்மை உள்ளத்தை நான் அறிய முடிந்தது?" என்று கூறியவாறு அந்த வார இதழையும் என்னிடம் கொடுத்தார். அந்த இதழில் வெளியான கதையின் ஓர் கட்டத்தில் பின்காணும் கடிதம் இடம் பெற்றிருந்தது:

அன்புள்ள சேகர்!

தங்கள் கடிதம் கண்டேன். கல்யாணமாகியும் தங்களை என்னால் மறக்க முடியவில்லை. இங்கு என் கணவர் என்னை நன்றாக நடத்தினாலும், நம் கடந்த கால வாழ்வை மறந்துவிட முடியுமா? இன்று மாலை தங்களைச் சந்திக்கிறேன்.

தங்கள்.........

நான் எழுதத்துவங்கிய கதையில் அன்றையதினம் எழுதிவைத்திருந்த இந்தக் கடிதத்தைப் படித்துவிட்டுத் தான் அந்தக் கோலம் பூண்டார் அவர். பாவம்! அவரை என்ன சொல்ல? ஆண்களே அப்படித்தானே இருக்கின்றனர் அவசரக்காரர்களாய்!

ஊது பத்திகள்

—[கே. ஜி. ராஜு]—

நறுமணத்தை விரும்பாதவர்கள் யாரும் இரார். மங்கல காரியங்களுக்கும், புனிதமானதெனக் கருதப்படும் வைபவங்களுக்கும் மலர், கந்தம் போன்றவற்றை உபயோகிப்பது சகஜமாகிவிட்டது. பண்டைக்காலத்திலிருந்தே நறுமணப்புகையை உண்டாக்கி உபயோகித்து வந்திருக்கின்றனர். தசாங்கம் என்ற நறுமண கலவைப் பொடியை தணலில் தூவி அதன் புகையால் மனக் களிப்படைந்தவர்கள், தனியாக தீயை தேடிக்கொண்டிராமல் ஒரே மூச்சில்—அதாவது ஒருமுறை தீ வைத்தால் அது அணையாமல் பற்றிக்கொள்வதற்கான நுட்பமார்க்கத்தில் ஊதுபத்தியைக் கண்டு பிடித்தனர். அதன் புகையை நுகர்வதால் மனத்தில் மகிழ்ச்சியும், புதுவகை உணர்ச்சியும் உண்டாக ஏதுவாகிறது. எனவே, பெரும்பாலான மக்கள் சாதாரணகாலங்களிலும் தங்கள் இல்லங்களில் ஊதுபத்தியை உபயோகிக்கின்றனர். அதனுல், விஷக் கிருமிகள் நாசமாகவும், கொசு, ஈ, கடிகள் ஏற்படாமல் தவிர்க்கப்படவும் ஏதுவாகிறது. அது மாத்திரமல்ல; அண்டை அயலில் உண்டாகும் துர்க்கந்தத்தை மறைக்கவும் முடிகிறது. எனவே, சுத்தம், சுகாதாரம், மனே உத்சாகம், மங்கல உணர்வு இவ்வளவையும் ஏற்படுத்தும் ஊதுபத்தியை உற்பத்தி செய்வதும், அதைத் தொழிலாய் நடத்துவதும் நல்ல பலனைத்தரும்.

சன்னபத்தி

1. கோரைக் கிழ்ங்கு பாகம் 5
2. அதிமதுரம் ,, 2
3. வெட்டி வேர் ,, 4
4. அகிர்கட்டை ,, 5
5. கிளியூரம்பட்டை ,, 5
6. சித்தரத்தை ,, 4
7. கார்போக அரிசி ,, 6
8. நாகணம் ,, 1
9. கொத்தமல்லி ,, 1
10. சந்தனம் ,, 6
11. பிசுக்குப்பட்டை (மைலாலக்கடி) ,, 3 முதல் 3½
12. காசாங்கரித்தூள் அல்லது தேங்காய் ஓட்டு கரித்தூள் 3½ அல்லது 4½ பாகம்.

இடிக்கவேண்டியவைகளை உலர்த்தியிடித்து மாச்சல்லடையால் சலித்து அம்மியிலிட்டு தண்ணீர் கூட்டிநேகாய் அரைக்கவும். காசாங்கரித்தூளையும் சேர்த்து அரைத்து சாந்தாக எடுத்துகொள்ளவும். சன்னமாய்ச் சீவியுள்ள மூங்கில் குச்சிகளில் பத்தியைத் தயாரித்துக் கொள்ளவும்.

பத்திகளை வெயிலில் உலர்த்தாமல் நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

குறிப்பு:—கருப்பு நிற பத்தி வகைகளில் சேர்க்கவேண்டிய ஓட்டுக் கரித்தூள் கிடைக்காவிட்டால், காசாங் கரித்துளை சேர்த்துக் கொள்ளலாம்.

ஜவ்வாது பத்தி

சந்தனத்தூள்	பலம்	20
கிளியூரம்பட்டை	,,	6
பூலாங்கிழங்கு	,,	10
விலாமிச்சவேர்	,,	2
கோரைக்கிழங்கு	,,	10
சன்ன லவங்கம்	,,	4
சிலா ரஸ்	,,	6
பூஞ்சாந்து	வீசை	½
அதிமதுரம்	பலம்	6
அஞ்சிப்பூ	,,	5
கார்போக அரிசி	,,	12
அகில் கட்டை	,,	12
தேவ தாரி	,,	12
கொத்தமல்லி	பலம்	8
செண்பகமொக்கு	,,	18
சோம்பு	,,	½
சாம்பிராணி	,,	8
குங்குமப்பூ	,,	12
கருவாப்பட்டை	,,	6
ரோஜாமொக்கு	,,	20
சித்தரத்தை	,,	3
ஏலம்	,,	6
ஜாதிக்காய் விராகனிடை		4
பத்திரி	பலம்	1
மைலாலக்கடி	,,	10

செய் பாகம்

இவைகளை கல் உரலில் இட்டு நேகாய் இடித்து மாச் சல்லடையால் சலித்துக் கொள்ளவும். அந்தப்

(26-ம் பக்கம் பார்க்க).

நூல் சலவை முறை

வேருெரு பாகம்

10 ராத்தல் கட்டுக்கு $2\frac{1}{2}$ அவுன்ஸ் பிளீச்சிங் பவுடர், சல்பூரிக் ஆசிட் 1-அவுன்ஸ், தண்ணீர் நூல் அமிழ்ந்து 1-கைப்பிடியளவு உயரம் இருக்கவேண்டும். முதலில் தண்ணீரில் பிளீச்சிங் பவுடரைக் கொட்டி நன்ருய் கலக்கவும். பிறகு சல்பூரிக் ஆசிடை ஊற்றி நன்ருக கலக்கிக்கொள்ளவும்.

இண்டாந்திரி கலர்

10 ராத்தல் நூல்கட்டுக்கு $2\frac{1}{2}$ தோலா வேட்புளூ பவுடரை கோப்பையிலிட்டு தண்ணீர் ஊற்றி சந்தனம்போல் குழைத்து வைத்துக்கொள்ளவும். நூல் அமிழ்ந்து 1 பிடி உயரம் தண்ணீர் நிற்கும்படி ஓர் பாத்திரத்திலிட்டு (அலுமினிய பாத்திரம் கூடாது) அடுப்பேற்றி தண்ணீர் கொதிவரும் சமயம் $2\frac{1}{2}$ தோலா காஸ்டிக் சோடா போடவும். அதை நன்ருய் குச்சியினுல் கலக்கிக் கரைந்தபின், தயாராய் வைத்துள்ள புளூவை இதில்

ஸ்ரீ M. S. மணிராவ்

போட்டு நன்ருய் தண்ணீரில் உறவாகுமாறு கலக்கிவிடவும். 5 நிமிஷம் பொறுத்து (Hydro Sulphite) ஹைட்ரோ சல்பைட் $7\frac{1}{2}$ தோலா அளவில் சிறுகச் சிறுக விட்டு குச்சியால் நுரை வரும்படி கலக்கவும். பார்ப்பதற்கு அந்த நுரை மயில் கழுத்து நிறமாகத் தோன்றவேண்டும்.

அப்போது சலவை செய்து வைத்துள்ள நூலை அதில் அமிழ்த்தி கலக்கவேண்டும். நூலை எடுத்துப் பிழியும் போது நூல் பச்சை நிறமாகத்தோன்றும். கயிற்ருல் கட்டிய கொடியில் அல்லது மூங்கில் கட்டையின்பேரில் காயப்போடவும். காற்றில் உலர உலர புளூ நிறமாய் மாறும்.

இதுதான் இண்டாந்திரி என்னும் பாஸ்ட் கலர் சேர்க்கும் முறை. இந்தக் கலர் இன்னும் பகட்டாகவும் பளபளப்பாகவும் இருக்கவேண்டுமானுல் பின்கண்ட பேஸிக் கலர் முறையை அனுசரித்து தயாரித்துக் கொள்ளவும்.

10-ராத்தல் நூலுக்குமுன் அளவுப்படி தண்ணீர் வைத்து சாப்பாட்டு உப்பைப்போட்டு கரைத்து விடவும்.

பேஸிக்கிரீன் 8 தோலா பவுடரை சந்தனம்போல் குழைத்துக்கொள்ளவும். அதை கொதி நீரில் ஊற்றி கலந்து முன்புபோட்டுள்ள இண்டாந்திரி கலர் நூலை இதில் போட்டு நன்ருய்ப் புரட்டி பிழிந்து உலர்த்திக் கொள்ளவும்.

இவ்வாறு செய்வதால் நூல் மிக கவர்ச்சியாய் இருக்கும். ஆனுல் துவைக்கும் போது இரண்டாவதாய் சேர்த்த கலர்தான் கரையும். முதலில் சேர்த்தது கரையாது.

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

பொடியை அம்மியிலிட்டு தண்ணீர் விட்டு மைபோல் அரைத்து சாந்தாய் எடுத்துக் கொள்ளவும்.

அம்பர்பத்தி இலகுமுறை

சந்தனக்கட்டைத்தூள்	பாகம்	3
கோரைக்கிழங்கு	,,	4
நெரியரிசிப்பால்	,,	1
கோஷ்டம்	,,	1
உரம்	,,	2
மைலாலக்கடி	,,	2

செய்பாகம்

இவைகளில் பொடிப் பண்ண வேண்டியவைகளை வெயிலில் உலர்த்தி இடித்து சலித்துக்கொள்ளவும். அதை அம்மியிலிட்டு உரம், நெரியரிசிப்பால் இரண்டையும் கூட்டி தண்ணீர் விட்டு சாந்தாக அரைத்து எடுத்துக்கொள்ளவும். அதை குச்சிகளில் தடவி நிழலில் உலர்த்திவிற்பனைக்கு உபயோகிக்கவும்.

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

புதுவை கதை

உண்மைச் சம்பவத்தை பின்னணியாய்க்கொண்டு புனையப்பட்ட இக்கதையில் சுதந்திர வேட்கையில் வெறியனாய் மாறிவிட்ட ராஜசேகரன் மூலம் உணர்ச்சியின் வேகத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறார் "தமிழானந்த பாரதீயன்" எளிய தமிழில். இனிய ஆனால் உணர்ச்சி மிக்க தமிழ் நடையில் சித்தரித்துள்ள இக்கற்பனை வாசகர்களின் வரவேற்பைப் பெறுமென்பது எமது நம்பிக்கை. ஆ—ர்.

தமிழானந்த பாரதீயன்

அன்று கிறிஸ்துவுக்குப் பின், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து நான்காவது நவம்பர் முதல் நாள்! ஆகஸ்டு பதினைந்துக்குப் பிறகு, இந்தியச்சரித்திரத்திலேயே அதி முக்கியத்வம் வாய்ந்த பெருநாள் அது! தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் பணியும் வீர பாண்டிய கட்டபொம்மன் கொடியுயர்த்திவைத்த தன்னாட்சிப்போர்— உலகமே வாழ்த்தி வணங்கும் உத்தம ஜோதி காந்திஜி தலைமை வகித்துப் படை நடாத்திய சுயராஜ்யப்போராட்டம்— இந்திய மக்கள் மனித ஜீவாதார உரிமைகளுக்காக அன்னிய ஆதிக்கங்களை எதிர்த்துப்புரிந்த பிரளய யுத்தம்— கண்ட இரண்டாவது மாபெரும் அறவெற்றி நவம்பர் முதல் நாள்!

யுக யுகாந்திரமாக, பாரத நாட்டின் கீழ்க் கரையிலே, செந்நா நீட்டி, பற்றியெரியும் செக்கச் சிவந்த அடிவானத்திலிருந்து தப்பி, அகண்ட வானவீதியிலே, உல்லாசமாகப் பவனி வரப்புறப்படப் பழகிவிட்ட ஆதவன், அன்றும், வைகறையிலே புதுவையின் மீது, தன் பொற்கிரணங்களை வீசிப்பரப்பினான். நீலத்திரைக் கடலோரமாய் பொன்மயமாகப் பிரதிபலித்த அம்மாநகரின் மீது, கடந்த இரு நூறு ஆண்டுகளுக்கும் மேலாக அமுக்கிப் பதுக்கி வைத்திருந்த பூரணப்பொலிவை என்றுமில்லாது அன்று தான் வாரி இறைத்தான் காலைக்கதிரோன்! அவன் மகிழ்ச்சிப் பேராழியில் நீந்தி விளையாடி வானமாம் மணற்பரப்பிலே புரண்டு உவந்தான். எல்லையில்லாத ஆனந்தம்! ஆம்! இத்தனை நாட்களாக, அவனுடைய கண்களை உறுத்திய கொடுங்காட்சி—புதுவைக் கடலோரத்தில் சலசலத்துக் கொண்டிருந்த கொடுங்கோலாட்சியின் சின்னமான பிரஞ்சுக்கொடி-அன்றில்லை! இந்த நாட்டுக் கொடியை மகுடமெனத்தாங்கி, புதுவையை யாள, புத்துணர்வுகொண்டு, கம்பீரமாக நின்ற, நெடிதுயர்ந்த அந்தக் கொடிமரத்தை நோக்கி வெற்றிப் புன்னகை புரிந்தான் உதய சூரியன்!

அன்று, கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே "புதுக்கே" எனப் பெயரடைந்து, தாலமியின் பாராட்டைப் பெற்ற புதுச்சேரி, பெருவிழாக்கோலம் பூண்டது! வீதிகளில் ஜனத்திரள் கட்டுக் கடங்காது பெருகி, போக்குவரத்தே ஸ்தம்பித்தது! ஆயிரக்கணக்கில், வழி நெடுக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உள்ளூர் மற்றும் மலபார் விசேஷ போலீஸாரும், மெதுவாக ஊர்ந்து சென்ற மக்களுக்கு, வேண்டிய உதவிகளை மகிழ்ச்சியோடு மனமுவந்து ஆற்றிக் கொண்டிருந்தனர்.

மகாத்மா காந்தி வீதி வழியாக (வெளியேறிய பிரஞ்சுக்காரர்கள் மகாகவி சுப்ரமண்ய பாரதியின் திருநாமத்தைக் கூட மற்றொரு ராஜவீதிக்குச் சூட்டியிருந்தனர்! நகர்ந்து வந்த என் கார் பெரிய மார்க்கட்டை யடைந்ததும் மேலே செல்லாமல் நின்று போயிற்று! அருகிலிருந்த ஜன நடமாட்டமற்றதொரு சந்தில் அதை நிறுத்தி விட்டு, தூப்ளேக்ஸ் வீதியில் நடக்கவாரம்பித்தேன்!

ஜனத்திரளைவிட அதிகமாக விருந்தது தேசீயக் கொடித் திரள்! புதுவையா அல்லது புது டில்லியா எனக் கண்டார் வியக்கும் வண்ணம் கொடிகளும் மூவண்ணத் தோரணங்களும் வீதியை யலங்கரித்தன.! கதர்க் குல்லாய்கள் ஏராளம்! "மகாத்மா காந்திக்கு ஜே!" "இந்தியத் தாய் வாழ்க!" "விடுதலை வீரர்கள் வாழ்க!" என முழங்கி, பீடு நடை போட்டுச் சென்ற ஊர்வலங்கள் எத்தனையோ! அவைகள் ஏந்திச் சென்ற துவஜங்களும் விளம்பர அட்டைகளும் தூரத்துப் பார்வையையே தடை செய்தன! மேள தாளத்துடன் ஆட்டபாட்டத்தோடு சென்றவர்கள் ஏராளம். மாணவர்கள் வீரர்களைப் போல அணிவகுத்துச் சென்றனர்! பணம் படைத்தோர் வீண் செருக்கை விடுத்தும், பாமரர்கள் வர்க்க வாதத்தை மறந்தும் தேசீய கோஷ மிட்டுச் சென்றனர்! மும்மொழி ராஜ்

2/21, Pilliar Koil Street,
MADRAS-3

Maniyam Industrial & Engineering Works
Government Approved Fabricator & Contractor,
(Regd. No.5.)

A.C.C. CEMENT STOCKIST

2, Sankari Road,
Trichengode,
(Salem Dt.)
(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப் பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பணவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்துவேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

யத் தலைநகரான, அங்கே, தமிழும் தெலுங்கும் மலையாளமும், பிரஞ்சும் ஆங்கிலமும், ஹிந்தியும் ஒலித்தன! தேசத்தின் விடுதலைத்திருநாளன்று வித்தியாசங்களை மறந்து, ஒன்று கூடிச் சுதந்திர மாதாவின் வீரப் புதல்வர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்!

இந்தக் கோலாகலத்தினிடையே ஒரு விசித்திர கோஷம் எழுந்தது! தனி மனிதன் ஒருவன் தன் குரலினால் பெருஞ்சக்தி கொண்டு "பிரஞ்சுக் கொடியைப் பிய்த்தெறிவேன்!" "மூவர்ண கொடியை நாட்டுவேன்!" "வாழ்க பாரதமாதா!" எனக் கூவினான்! கலவரமடைந்துபோன மக்கட் கூட்டத்தின் மத்தியில் அவனைத் தேடிக்கண்டு பிடித்தேன்! அவனருகே சென்றேன்! அவனோ தாடியும் மீசையுமாக, குழிவிழுந்த கண்களும், ஒட்டிய கன்னமுமாக, அழுக்கடைந்து, கிழிந்த துணியும், பரட்டைத் தலையுமாகக் காட்சியளித்தான்! கையில் நம் நாட்டுக் கொடி ஏந்தி, தன் மனைவியொடு கரங்கோர்த்து, மைந்தனை உடன்கொண்டு, போர் வீரனைப்போலத்தோன்றிய—பார்வைக்குப் பைத்தியக் காரனாகத் தென்பட்ட—அவன் ஒரு பெயர் பெற்ற துணிக்கடையின் முன் அலங்காரமாகத் தொங்கிக்கொண்டிருந்த பட்டுத்திரைகளைப் பிடுங்கித் தள்ளினான்! கூட்டமோ அல்லது கடை முதலாளியோ அவனைத் தடுக்கவில்லை! "இனியும், இம்மாதிரி, நீலம், வெள்ளை, சிகப்புத்துணிகளை, பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் கொடியை நினைவுப் படுத்தும் வகையிலே தொங்க விடாதீர்கள்!" எனச் சொல்லிக்கொண்டே அந்தத் திரைகளை யெல்லாம் சேகரித்துக் கடைக்காரரிடம் ஒப்புவித்து விட்டு, தன் வழியே செல்ல வாரம்பித்தான்! தீவிரமான தேச பக்தன்! சுற்றியிருந்த மக்களும் வழி விடுத்ததைக் கண்டு வியந்தேன்!

நடந்து கொண்டே இருந்த அவன், திடீரென ஓட ஆரம்பித்தான்! உடனே, நடைப் பாதையில் நெருக்கியடித்துச் சென்ற மக்கள் அவனைத் தடுத்து நிறுத்தக் கூச்சலிட்டனர்! பிரஞ்சுக் கொடி சலசலத்துப் பறக்க, கம்பீரத்துடன், ஒரு கார் வேகமாக வந்தது! துணிந்த சிலர் அவனை விபத்தினின்று காப்பாற்ற ஓடினர்! காரும்...

* * *

இருபத்தியொரு முறை பீரங்கி வெடிக்கவும், வெடியோசைக்கிடையே, நம் சார்பில் ஸ்ரீ கேவல்சிங் அவர்களும், அன்னியர்கள் தரப்பில் ஸ்ரீ பியெர் லாந்தி என்பாரும் மாஜி பிரஞ்ஜிந்தியப் பகுதிகளை நடைமுறையில் இந்திய அரசாங்கத்திற்கு மாற்றும் உடன் படிக்கையில் கையெழுத்திடவும், ராஜ் பவனத்தில் தேசியக் கொடியைப் பறக்கவிடவும் சரியாக இருந்தது! மாளிகையின் எதிரே, திரண்டிருந்தமக்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர்! வெற்றி முழக்கம் வானைப்பிளந்தது! விஜய கோஷம் அமரர் ப்ரதிக்கு எட்டியிருக்கும்! அரவிந்தருக்கும் கேட்டிருக்கும்! காந்திஜீக்கும் காது செவிடு பட்டிருக்கும்!

சரித்திரப்.பிரசித்திபெற்ற அந்தச் சம்பவத்தைப்பற்றிய செய்தி அறிக்கையை முடித்து, நான் பிரதிநிதித்வம் வகித்த பிரபல சென்னைநாளிதழுக்கு "ட்ரங்க். டெலி

"போன்" மூலம் அனுப்பி விட்டு, மற்றொரு நிருபருடன் ஆஸ்பத்திரி நோக்கி, காரை மெதுவாக விட்டுச் சென்றேன்! நான் அவசர அவசரமாக, துய்ப்லெக்ஸ் வீதியிலிருந்து ராஜபவன நடவடிக்கைகளைக் கவனித்துச் செய்தி எடுக்க வந்துவிட்டபிறகு, என் தலைமையின் கீழ் வேலைசெய்த நிருபர்களை விட்டு அந்தத் தீவிர தேசியவாதியின் வரலாற்றினைச் சேகரித்திருந்தேன்.

ராஜசேகரன்— அதுதான் அவனுடைய திருநாமம்— ஒரு தொழிலாளி! தேசபக்தி என்னும் கனல், 1922ல், மகாத்மா காந்தி "வெள்ளையனே வெளியேறு!" எனக் கர்ஜித்து எழுப்பிய புயலில், தொழில் செய்து வாழ்ந்து வந்த அவனுடைய பஞ்சு உள்ளத்தையும் பற்றிக் கொண்டது!

புதுடில்லி சுதந்திரம் படைத்ததும் புதுவையும் விடுதலையடைய வேண்டுமெனப் போராட்ட வீறு கொண்டு சீறியெழுந்தது! பிரஞ்சிந்தியா வெங்கும் இந்தியக் கொடிகளை உயர்த்தி வீர வணக்கம் செலுத்தினர் மக்கள்! விடுதலை கோஷங்களை எழுப்பினர்! வெள்ளையாதிக்கமும் அடக்குமுறையரக்கனைக் கட்டவிழ்த்து விட்டது! அதன் அகோரப்பசிக்கு எத்தனை எத்தனையோ உயிர்கள் பலியாயின! அதன் கோபாக்கினிக்கு எத்தனையோ குடிசைகள் ஆகுதியாகிச் சாம்பலாயின! அதன் இரும்புச் சிறைகளில் வாடி வதங்கியவர் பலர்.

ராஜசேகரனுக்கும் மூன்றுண்டுக் காராக்கிருகம் கிட்டிற்று! அவன் தன் தேசத்திற்காக, மகிழ்வோடு, மனைவியையும் மகனையும் பிரிந்து வெஞ்சிறை ஏகினன்!

ஆண்டுகள் சென்றன!

1954-ஆம் ஆண்டில், மார்ச் மாத இறுதியில் விடுதலைப் போராட்டம் ஒரு புதுவேகத்தைக் கண்டது! ஆளும் கட்சியின் தலைவராக இருந்த ஸ்ரீகுபேரும் அவருடைய சகாக்களும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற முறையில், புதுவை சட்டசபையிலும் எல்லா முனிஸிபல் கௌன்ஸில்களிலும் "இந்தியாவுடன் இணைந்தே தீருவோம்!" எனத் தீர்மானம் நிறைவேற்றினர்! சட்டப்பிரகாரம் அவர்களுடைய ஏகோபித்த முடிவுக்குச் செவிமடுக்கவேண்டிய வெள்ளை அரசாங்கம், சுதந்திரப்போராட்டத்திற்கெதிராக மிருகத்தனமாக நடந்துகொள்ளத் தொடங்கிற்று! ஸ்ரீகுபேர் போன்ற தலைவர்கள், புதுவை நகரத்திலிருந்து புறப்பட்டு, இந்திய யூனியனுக்குள் திட்டுப்போல இருந்த நெட்டப்பாக்கம் கொம்யூனைக் கைப்பற்றி, சாத்வீக முறையில், மக்களின் போராதரவோடு, புதுவையின் சுதந்திர அரசாங்கத்தை ஸ்தாபித்தார்கள்! மேலும், நெட்டப்பாக்கத்துடன், திருபுவனை போன்ற பெரும் பகுதிகளும் விடுதலைப்பிரகடணம் செய்யவே, தலைநகரிலும் போராட்டம் வலுத்தது! ராஜசேகரனும் அவ்வப்போது கைதியாவதும் விடுதலையடைவதுமாக இருந்தான்.

பிரஞ்சு மக்களின் சுதந்திரத் திருநாளாகிய அத்தினத்தை, புதுவையில் வழக்கம்போல விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தார் கவர்னர் மேனூர்! ஆனால் அவருக்குமட்டுமல்ல போலீஸ் தலைமையதிகாரி கொய்யார் அவர்களுக்கும் கிலி பிடித்திருந்தது!

P. ஹாசேன்ஷா & சன்ஸ்
(பூரண உரிமையாளர்)
P. H. முகமது நஸீரூத்தீன்
டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்
G I பைப் & பைப் பிட்டிங்ஸ் வியாபாரம்,
இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்.
பாலக்கரை ரோடு திருச்சி-8.
தபால் பெட்டி நெ. 456
போன்: 786
தந்தி: HARDWARE

கடலோரத்தையொட்டி கவர்னர்ப்பூங்காவில், ஜூலை 14-ம் நாள் பிரஞ்சு குடியரசு நாள். அந்நாளில் புரட்சி வீரர் பொறுமை இழந்தனர். பலாத்கார ராஜசேகரனும் பொறுமையிழந்து, உணர்ச்சி மயமாகி வெறி கொண்டான்! அவன் தலைமையில் ஒரு கோஷ்டி, போலீஸ் பாராவைத் தூக்கியெறிந்து விட்டு ராஜ்யத்தின் சர்வாதிகார பீடமான கவர்னர் மாளிகையினுள் நுழைந்து விட்டது. ராஜசேகரன் கையில் ஒரு இந்தியக் கொடியுடன், மாடிப்படிகளில் தாவி ஏறினான்! ஒரே பாய்ச்சலாக வந்த அவன், பிரஞ்சுக் காலனி ஆட்சியின் சின்னமான முக்கிய கொடிமரத்தைப் பற்றினான்! ஏற்றியிருந்த ஏகாதிபத்தியத்தின் கொடியை இறக்கி, சுதந்திரக் கொடியை ஏற்ற முயன்றான்! ஐயோ! ஒரு வெள்ளைக்காரன் சீறிவந்தான்! துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தான்! மறுகணம் ராஜசேகரனின் மண்டையில் பலத்த அடி! மயங்கி விழுந்தான்.

ராஜசேகரனைப் போல அடிபட்டவர்கள் பலர்.

ராஜசேகரன் ஒருவாறு சுகமடைந்து வெளிவந்தான்.

நவம்பர் முதல் நாளிலும் அவனுடைய சித்தம் தெளியவில்லை.

பிரஞ்சுக்கொடி பறக்க ஓடி வந்த காரின் மேல் பாய்ந்தான் ராஜ சேகரன்.

அந்தக் கார் அவனைத் தாக்கி எறிந்தது! அவனும் அதற்குள், அதில் பறந்து கொண்டிருந்த பிரஞ்சுக் கொடியைப் பிடுங்கி எறிந்து விட்டான்!

* * *

அவனைச் சுற்றி, மற்றவர்களுடன், இரண்டு மூன்று வெள்ளைக்காரர்களும் நின்றிருந்தனர். அவர்களின் முகத்தில் கவலையும், களிப்பும் மாறி மாறித் தோன்றின! காரால் மோதியவர் புதுவை ராஜ்யத்திற்குப் புதிதாக நியமிக்கப் பட்ட பிரஞ்சுப் பிரதிநிதி! அதனால் அவருடைய முன்னிலையிலேயே திறமைமிக்க இரு வெள்ளை டாக்டர்கள் ராஜ சேகரனைக் கவனித்தனர்.

மயக்கம் நீங்கிக் கண்விழிக்க நெடுநேரமாகியது. சுற்றிச் சுற்றி மிரண்டு பார்த்தான். அவன் காலடியில் அழுகையை அடக்கிக்கொண்டு நின்றிருந்த மனைவியையும், மகனையும் பார்த்தான்! புன்னகை புரிந்தான்!

"இவர் பிரஞ்சு..." என்று ஒருவர் பிரதிநிதியைச் சுட்டிக்காட்டி அறிமுகம் செய்துவைக்க முனைந்தார்.

ராஜசேகரனின் முகம் சிவந்தது! எழுந்து உட்கார்ந்தான்! தன் பழைய கோஷங்களைக் கிளப்ப ஆரம்பித்தான்.

டாக்டர்கள் பயந்துவிட்டனர். தெளிந்து போன பைத்தியம் மீண்டும்.........

"கீழூர்த்தேர்தலில் பிரஞ்சுக்காரர்களுக்கு ஆதரவு சற்றேனும் இல்லாது போனதால், புதுவைக்குச் சுதந்திரம் வழங்கிவிட்டனர், என்றேன் நான்.

அவன் சமாதானமடைந்தான். சன்னல் வழியாகப் பார்த்தான். கடலோரத்துக் கொடி மரத்தில் ஸ்ரீ ஆர். கே. நேரு ஏற்றிவைத்த இந்திய மூவர்ணக்கொடி நவம்பர் முதல் நாளின் பெருமையைப் பறைசாற்றக் கண்டான்.

Sree Jayalakshmi & Co.,
MAKERS OF CANE FURNITURE
114, ராயப்பேட்டை ஐரோடு, : : மைலாப்பூர், சென்னை-4.



எந்த விதமான உபயோகத்துக்கானாலும் சரி, எப்படிப்பட்ட புது டிசைன்களாக இருந்தாலும் சரி; அவைகளை உறுதியான நல்ல பிரம்புகளைக்கொண்டு, நீடித்த உழைப்பு தரும்படி தயார் செய்து, அழகான கண்ணைக் கவரும் பலநிற இனாமல் வர்ணங்களினால் அலங்கரித்து குறித்த நேரத்தில் டெலிவரிசெய்கிறோம். வெளியூர் ஆர்டர்கள் அடிக்கடி கவனிக்கப்பட்டு நேரம் தவறாமல் புக் செய்யப்படும். உள்ளூர் நபர்கள் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

உரிமையாளர்,
K. N. ராஜன்.

கருத்துரை:

காத்தவராயன்

இரண்டு புகழ்பெற்ற நடிகர்கள் சிவாஜியும், எம் ஜி யாரும் சேர்ந்து நடித்த படமான 'கூண்டுக்கிளி' என்ற படம் வெளிவந்தபோது படம் வசூலில் தோல்விகண்டாலும் டைரக்டர்ராமண்ணவை தமிழகம் நன்றாகப் புரிந்து கொண்டது.

அவருடைய நீண்டகால சலியாத உழைப்பால் உருவாக்கப்பட்ட 'காத்தவராயன்' என்ற படம் ரசிகர்களை ஏமாற்றவில்லை என்றாலும் நல்ல பாராட்டுதலைப் பெறவில்லையே என்று நினைக்கும் போது வருந்த வேண்டித்தானிருக்கிறது.

கதை, நாடறிந்த கதை! ஏற்கனவே மேதை சின்னப்பா நடித்து ஆர்யமாலா என்றபெயரில் வெளிவந்தும் இருக்கிறது. பழைய கதைக்கு இல்லை. படத்துக்கு புது மெருகு கொடுத்து எடுக்க வேண்டும் என்று பாடுபட்டிருக்கின்றனர். ஆனால் என்னதான் இருந்தாலும் 'பழைய ஆர்யமாலாவின் விறுவிறுப்பை இதில் காண முடியவில்லையே! ஏன்?

கதை ஓட்டம் பல இடங்களில் செக்குமாடுபோல் செல்கிறது. அமைப்பாளர் மூர்த்தி சிறிது கவனம் செலுத்தி இருக்கலாம்! அவருடைய வசனமும் குறிப்பிட்டுக் கூறுவதற்கு ஒன்றுமில்லாமல் இருக்கிறது. ஒரு சில இடங்களைத் தவிர மூர்த்தியின் பேனா சரியான முறையில் வேலை செய்யவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

கலைமேதை சின்னப்பா ஏற்று நடித்த பாகத்தில் நடிகர் திலகம் நடிக்கிறார். என்னதான் இருந்தாலும் சின்னப்பா சின்னப்பாதான் என்று நினைக்கத்தோன்றுகிறது. மோடி எடுக்கும் போதும் சரி, சின்னப்பாவின் நடிப்பு உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. ஆனால் நடிகர் திலகம் எவ்வளவோ முயன்றும் திறமையை வெளிப்படுத்தியும் குடத்திட்ட விளக்காய்த்தான் காட்சி தருகிறார்.

சங்கிலியால் பிணைக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படும் போதும், இறுதிக்கட்டத்தில் நகரை அழித்துப்பேய்ச் சிரிப்பு சிரிக்கும் போதும் சிவாஜி தன்னை மறந்து நடித்திருக்கிறார். அதற்கு அவர்தான் சரி என்ற முறையில் இருக்கிறது அவரது நடிப்பு.

ஆர்யமாலாவாக சாவித்திரி நடிக்கிறார். பாராட்ட

சரவணபவா, யூனிடி பிக்சர்ஸாரின் ''நான் வளர்த்த தங்கை''யில் பிரேம் நஸிரும், டெய்ஸி இராணியும்.

வேண்டியதே,தீ! சேட்டானாக பாலையா நடிக்கிறார். படம் அவருடைய நகைச்சுவையை நம்பியே ஓடுகிறது.

தங்கவேலு சேனாபதி வேஷத்துக்கு பொருத்தமா? சேனாபதி என்றால் கோமாளி என்ற பொருளில் போட்டிருக்கின்றனரோ?

தோழியாக வரும் சரோஜா ராஜகுமாரியை விட ஆடம்பரமாய் இருக்கிறார். வேண்டப்பட்டவர்கள் என்பதற்காக கதை அமைப்பை மறந்து விடுவதா? ஏன் தானோ இத்தனை ஆட்டங்கள்? சரோஜா புதுமுகம் இல்லையே!

படத்தின் ஆரம்பத்தில் கோபி கிருஷ்ணா குமாரி கமலா, சிவபார்வதி நடனம் இருக்கிறது. பாதிக்காசு அந்த நடனத்துக்காகவே செல்லும். கோழி நடனம் நல்ல கருத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

குறைகள் குறைவாகத் தென்படுமாறு படமாக்குவதில் கெட்டிக்காரர் ராமண்ணா! ஆனால் காத்தவராயன் விதிவிலக்காக அமைந்துவிட்டது. மிகப் பெரிய அளவில் ஏராளமான பொருட் செலவில் தயாரித்து இருக்கும் படம் எடுபடவில்லை என்று ரசிகர்கள் குறைபட்டுக்கொள்கிறார்கள். காரணம் என்ன? ஆமாம்! ஸெஸில் பி. டெமிலைப் போன்று படங்களைத் தயாரிக்க நம்மீடையே இன்னும் போதிய வசதிகள் இல்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இருப்பினும் சற்று கவனம் செலுத்தினால் சிறந்த படங்களை நம்மால் தயாரிக்க முடியும். ராமண்ணா தமது அடுத்த தயாரிப்பையாவது லட்சியத்தின் அடிப்படையில் தயாரித்து வெற்றி பெறுவார் என்று நம்புகிறோம். அவர் திறமை சாலி! எனவே நம்பிக்கை வீண் போகாது! —சோ. க.

—●—

பொன்மொழி

ஒருநாளும் நம்முடைய எதிரியைப் பகைத்து மேற்கொள்ள முடியாது; அன்பு கூர்ந்துதான் வெல்ல முடியும். —காந்தி.

M. KANNAN

Government Approved Fabricator and Contractor

(Regd. 10)

No. 30, Wall Tax Road, Madras-3.

★

PLEASE CONTACT US FOR COLLAPSIBLE GATES,
MAIN GATES, WINDOW GRILLS,
VENTILATORS AND ALL OTHER BUILDING MATERIALS

★

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas welding
Stainless Steel, Aluminium Gas cutting works are also undertaken.

Our motto is to satisfy our customers

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press, 30, Edapalayam St., Madras-3

Asst. Editor : K. G. RAJU.

ALVITONE

(AN IDEAL FOOD BEVERAGE)

Doctors Agree is Good for You & Me.

Prepared under the most hygienic conditions ALVITONE is an ideal food beverage containing concentrates from Almond, Barleymalt, Full-cream Milk and Cocoa. Extra rich in vitamins and calcium, it is an ideal drinking food for invalids and Nursing mothers.

Get a tin today.

ALVITONE LABORATORIES, MADRAS-16

★

சுவை மிக்கது ! வலிமை தரக்கூடியது ! சோர்வு நீக்கி சுகம் தருகிறது !

ஆல்விடோன்

பாதாம் பருப்பு, பாலாடைக்கட்டி, பார்லிமால்ட், கோகோ முதலிய சிறந்த சத்துள்ள உணவுப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட ஆல்விடோன் ஓர் உயர்ந்த உணவு டானம்.

கால்ஸியத்துடன் உயிர்ச் சத்துக்கள் நிறைந்த ஆல்விடோன் உங்களுக்கு எப்பொழுதும் புத்துணர்ச்சியும் வலிமையும் ஊட்டுகிறது.

இந்தியாவின் திலகமாய் விளங்கும் தென்னகத்தின் ஓர் இணையற்ற தயாரிப்பு ஆல்விடோன்.

ஆனந்தமடைய ஆல்விடோன் அருந்துங்கள் !

ஆல்விடோன் தொழிற்சாலை

சென்னை-16

காங்கிரஸ் பொருட்காட்சி

1958-59

சித்திர கலைக்கூடம்

தற்போதைய இந்திய சைத்ரீகர்களின் வண்ண ஓவியங்கள்,

சித்திரங்கள் மற்றும் சிற்பங்களின் கண்காட்சி

★

பாலர் - கலைப்பகுதி ஒரு விசேஷ அம்சம்

பரிசுகளாக ரூ. 2600 வழங்கப்படும்

21-12-58 ஞாயிற்றுக்கிழமை கண் காட்சி திறப்பு விழா

மத்திய உள்நாட்டிலாகா மந்திரி

கனம் கோவிந்த வல்லப பந்த் அவர்கள்

திறந்துவைக்க இசைந்துள்ளார்.

விபரங்களடங்கிய பிரசுரத்திற்கு விண்ணப்பிக்கவும் :

காரியதரிசி :

ஸ்ரீ C. R. ராமசாமி, எம். எல். ஏ., எம். சி.

காங்கிரஸ் மைதானம் - சென்னை-6.

ANANDA PARVATHI PRESS, MADRAS-3